நம

பிரசண்ட விகடன்

"இடுக்கண் வருங்கால் நகுக அதனை
அடுத்தூர்வது அஃதொப்பது இல்"

மலர் 4. சென்னை, 1936ளு ஆகஸ்டுமீ 15உ இதழ் 10.

உள்ளுறை.

	விஷயம்.	பக்கம்.
1.	அல்லி ராஜ்யம் உதயம்?	2
2.	காலச் சக்கரம்	5
3.	சீமாட்டி கார்த்தியாயினி (தொடர் கதை)	9
4.	வாழ்க்கையில் ஓர் காட்சி	13
5.	"ஜஸ்டீஸ் அம்மா ஜஸ்டீஸோ!" (படம்)	16
6.	ஒரே ஒரு வௌவால்	17
7.	ஆசாபந்தம்	20
8.	நூற்றுக்கு நூறு காதல் கதை	23
9.	வீராசாமியின் வீரம்	26
10.	தமிழ் நாடு (பாட்டு)	30
11.	பண்டங்கள் பலவிதம்	31
12.	வரலக்ஷ்மி விரதம்	33
13.	பாப்பா பேசுகிறது	36
14.	"சம்பந்தம் சரிதானே!"	38
15.	புதுச்சேரி சில்க்	42
16.	கணையாழியின் மர்மம்	45
17.	ஆடல் பாடல்	49

"விகடனி"ல் வரும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்களே. தனிப்பட்டவர்களைக் குறிப்பவை இல்லை.

அல்லி ராஜ்யம் உதயம்?

‘கலி முற்றிப் போய் விட்டது! உலகமே தலை கீழாகி வருகிறது. இனி நாம் இவ் வுலகத்தில் இருக்க முடியாது.'' என்றெல்லாம் மனிதர்கள் தங்களுக்குப் பிடிக்காத விபரீதத்தைக் கண்டால் விரக்தியாகக் கூறுவதுண்டு. இப்போது "விகட"னும் அவ்வாசகத்தையே ஒப்புவிக்க வேண்டிய சந்தர்ப்பம் நேர்ந்து விட்டது. என்ன அப்பேர்ப்பட்ட நெருக்கடியான நிலைமை "விகடனு"க்கு ஏற்பட்டு விட்டது என்று வாசகர்கள் ஆச்சரியத்துடன் கேட்கலாம். ஆம். நெருக்கடியான நிலைமை தான். விகடனுக்கு மட்டுமல்ல; உலகத்திலுள்ள ஆண் மக்களுக்கெல்லாமே இது ஒரு சோதனை காலம் என்றே கூற வேண்டும். விஷயத்தைச் சொன்னால் வாசகர்கள் துள்ளி விழக் கூடாது. சற்று பொறுமையாகவே கேளுங்கள்.

"..............ஆடவர்கள் செய்யக் கூடிய சிறந்த காரியம் வீட்டு வேலைகளை ஏற்றுக் கோண்டு, குழந்தைகளைப் பார்த்துக் கொள்வதுதான். இக் காரியத்திலும் அவர்கள் குழப்ப முண்டாக்குவார்களென நான் நம்புகிறேன்."

இது விகடன் கூற்று என நினைத்து விடாதீர்கள். ஒரு பெண்மணி திருவாய் மலர்ந்து அருளியதாகும். இதைப் படித்ததும், ஆண் சிங்கங்களே! உங்களுக்குத் தற்கொலை செய்து கொண்டாகிலும் உயிரை விட்டுவிட வேண்டுமென்று தோன்றவில்லையா! இன்னும் விஷயத்தைக் கேளுங்கள். நடந்த விஷயத்தை விவரமாக "விகடன்" கூறி விடுகிறான். (எடுத்த எடுப்பிலேயே எல்லாவற்றையுங் கொட்டி விட்டால், ஏதேனும் விபரீதம் நேர்ந்து விடுமென்ற பயத்தால் தான் இவ்வளவு தூரம் பீடிகை போட்டு மெல்ல மெல்ல விஷயத்தை "விகடன்" கூறுகிறான்.)

சமீபத்தில் லாகூர் ஒய். எம். ஸி. ஏ. மண்டபத்தில் ஒரு ரஸமான விவாதம் நடைபெற்றது. "இந்தியாவிற்குக் கதிமோட்சத்தை யளிக்க வல்லவர்கள் பெண்களா? ஆண்களா?" என்பது விஷயமாகும். இவ் விவாதத்தில் ஆண் பெண் இரு பாலாரும் கலந்து கொண்டனர்.

அக் கூட்டத்தில் தான், "ஆடவர்கள் ஒன்றுக்கும் உதவாதவர்கள்; அவர்களால் ஒரு காரியமும் செய்ய முடியாது. இந்தியாவுக்குக் கதிமோட்சத்தை யுண்டு பண்ண அவர்களால் முடியவே முடியாது. ஆகவே, அவர்கள் அடுப்பூதவும், தொட்டிலாட்டவுந்தான் இனி போக வேண்டும். அவற்றைக் கூட அவர்கள் சரியாகச் செய்வார்களா என்பது சந்தேகமே" என்று பெண்மணிகள் ஆடவர்களுக்கு நற்சாட்சிப்பத்திரம் அளித்திருக்கிறார்கள்.

பெண்கள் தான் ஆடவர்கள் மீது உள்ள வன்மத்தால் ஏதோ கூறுகிறார்களென்றால், ஆண் இனத்தைச் சேர்ந்த இரண்டொருவர் கூட பெண்மணிகளுக்காக வக்காலத்து வாங்கிப் பேசியது—தங்கள் இனத்தவரையே இழித்துப் பேசியது—தான் "விகட"னுக்கு வியப்பைத் தருகிறது.

இவ் விவாதத்தை ஆரம்பித்து வைத்த புரொபஸர் திவான்சந்து சர்மா பேசியதை வாசியுங்கள்:—

"தேசோத்தாரண வேலையில் ஆடவர்கள் வெகு காலமாக ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்கள் அவ்வேலையை ஒரே குழப்பமாகச் செய்து விட்டார்கள். அரசியல், பொருளாதார, கலாஞான, ஆத்மார்த்திகத் துறைகளில் இந்தியாவை முன்னேற்றுவிக்க இந்தியப் பெண்மணிகளால் தான் முடியும். நம் மகளிர் குறுகிய வகுப்பு வாதத்தைக் கைவிட்டுத் தேசப் பொது நலத்திற்காக அவர்கள் பாடுபட முடியுமென்பது, சென்ற இருபது வருட காலமாக அவர்கள் நடத்தும் அரசியல் வேலைகளால் தெரியவருகிறது. மாதர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்தால் அவர்கள் வெளி வேஷத்திற்குப் பதிலாக உண்மையான நன்மையையும், அயோக்கியத் தனத்துக்குப் பதிலாக சத்தியத்தையும், பதவி வேட்டைக்குப் பதிலாக யோக்கிய முடைமையையும் ஏற்படுத்துவார்கள். அதன் வாயிலாக அவர்கள் இந்திய அரசியலைத் தூய்மைபடுத்துவார்கள். பொருளாதாரத் துறையில் இந்திய பெண்மணிகள் தங்களை அறியாமலே சர்தர்ம வாதிகளாக இருக்கின்றனர். ஆடவர்கள் முதலாளித்வ மனப்பான்மை யுடையவர்களாவர்"

எப்படி யிருக்கிறது புரொபஸரது அபிப்பிராயம்! இக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த "டிரைபூன்" பத்திரிகையின் உதவியாசிரியர்—பண்டித பியாரி மோகன் தத்தாத்திரேயர் கூட, "இருபதாவது நூற்றாண்டு, மகளிரது நூற்றாண்டாகும். ஒவ்வொரு தேசத்திலும் பெண்மணிகளே தங்களுக்குரிய தகுதியைப் பெற்று அதன் கதியை நிர்ணயித்து வருகிறார்கள். எனவே, இந்தியாவின் கதியை நிர்ணயிக்கவும் பெண்களுக்கு உரிமை இருக்கிறது" என்று மகளிர் சார்பாகவே ஒத்து பாடி யிருக்கிறாரென்றால் அதற்கு மேல் வேறென்ன கூற வேண்டும்!

இக் கூட்டத்தில் "விகடனை"ப் போன்ற அப்பாவி மனிதர்களும் சிலர் இருந்தார்களென்று தெரிகிறது. டாக்டர் நந்தலால் என்ற மாஜீ இந்தியா சட்ட சபை யங்கத்தினர்,

"மகளிர் வீடுகளைப் புறக்கணித்து அரசியலில் தலையிட்டால் அது தற்கொலைக்கு ஒப்பாகும். அரசியல் துறையில் ஆபாசங்களே மிகுதியாக நிறைந் திருக்கின்றன. எனவே, இந்திய மகளிர் அதில் கலந்துகொள்ளக் கூடாது."

என்று கூறி பலறினர்.

"பெண்மணிகள் ஜூலியஸ் ஸீஸர், நெப்போலியன், ராணா பிரதாபசிங் முதலிய வீர ஆண்மக்களைப் போல ஏதேனும் பெரிய காரியங்களைச் சாதிக்க முடியுமா? ஸ்டாலின், முஸோலினி, ஹிட்லர் போன்ற மகளிரைப் பெற முடியுமா? என்று நான் கேட்கிறேன்" என ஸ்ரீமான் ரவிகோஸ்வாமி பெண்ணுலகத்துக்கே ஒரு சவால் விடுத்தார். மற்றொரு கர்நாடகப் பேர்வழி —அவர் பெயர் டாக்டர். வி. எஸ். நந்தா என்பது—"மகளிர் ஆடவரைப் போல அறிவாளிகளாக இருக்க முடியாது. அவர்கள் இளகிய மனமுள்ளவர்களாதலால், நீதிபதிகளாகவும் ராஜதந்திரிகளாகவும் இருக்கத் தகுதி யற்றவர்களாவர்" என்று ஒரு குறையழுதார்.

ஆனால், பெண் மணிகளா இதற்கெல்லாம் சளைப்பவர்கள்? மேற் சொன்னவர்களுடைய வாதத்தையெல்லாம் பஞ்சு பஞ்சாகப் பறக்கடித்து விட்டார்கள். ஸ்ரீமதி சுசீலாநால் என்னும் பெண்மணி கூறிய வீர மொழி (மேலே தலைப்பில் எடுத்துக்

காட்டிய வாசகம் இவ்வம்மையாருடைய திருவாய்மொழி என்பதை வாசகர்கள் அறிய வேண்டும்.) யொன்றே போதுமே ஆடவர்களைத் தலைகுனிய வைப்பதற்கு! "தற்காலம் மகளிர் பொது இயக்கங்களில் கலந்துகொள்ளத் தகுந்தவர்களாக இருக்கின்றனர். தேசத்தின் முக்கிய விஷயங்களில் கவனஞ் செலுத்தக்கூடிய மனோபாவம் ஆடவர்களுக்கில்லை. இதுவரை அவர்களால் எதுவும் சாதிக்க முடியவில்லை; எப்பிரச்சினைகளையும் தீர்க்க முடியவில்லை....

....

ஆடவர்கள் போராடவும், மகளிர் அழவும் வேண்டுமென்று கூறிவந்த காலம் மலையேறிவிட்டது. மகளிர் ஆடவரின் சமபங்காளிகள் என்று மட்டும் சொல்லக் கூடாது. அவர்கள் ஆடவர்களைவிட அதிக பங்குள்ளவர்கள் என்றே கூறவேண்டும். பெண்மணிகளால்தான் இந்தியாவுக்குக் கதி மோட்சம் ஏற்படக்கூடும்?" என்று அவ்வம்மையார் ஆணித்தரமாக அறைந்தார்.

ஸ்ரீமதி கமலா கோஸ்வாமி என்னும் மற்றொரு பெண்மணி "தொட்டிலாட்டும் கை உலகை ஆளுகிறது. மகளிர் புரட்சிக் கொடியை விரித்திருக்கிறார்கள். அவர்கள் ஆடவர்களுக்குப் பணிந்து வேலை செய்ய—பணியாளராக இருக்க-மறுக்கின்றனர்" என்று தற்போதைய பெண்கள் மனப்பான்மையை விளக்கிக் கூறினார்.

இவ்விருதரப்பாரது வாதங்களின் மீது சாதகமாகவோ, பாதகமாகவோ அபிப்பிராயங் கூற இப்போது "விகடன்" தயாராக இல்லை. பெண்கள், தங்களைப் பலகாலமாக யாதொரு சுதந்திரமுங் கொடுக்காது அடக்கி யாண்டு வந்திருக்கும் ஆண்கள் மீது எவ்வளவு தூரம் ஆத்திரங் கொண்டிருக்கிறார்கள்; அவர்கள் பழிக்குப் பழி வாங்கத் துணிந்திருக்கிறார்கள் என்பதற்கு "பெண்மணிகளுக்கு ஆடவர்கள் இழைத்துவரும் கொடுமையை நாம் எவ்வளவுநாள் சகித்திருப்பது? நாம் விழித்தெழுந்து உரிமைகளைப் பெற முயலவேண்டாமா?" என்று அவர்கள் முழங்கிவரும் முழக்கத்தை மட்டும் எடுத்துக் காட்டி ஆடவர்களை எச்சரிக்க விரும்புகிறான். விஷயம் வெகு தூரத்துக்கு மிஞ்சிப் போய்விட்டது. இந்தியாவிலுள்ள பெண்மணிகள் சுதந்தர தாகமும் தன் மதிப்புணர்ச்சியுங் கொண்டு நாலாபக்கமும் வீறிட்டெழுந்து வருகிறார்கள்; வீரநாதஞ் செய்து வருகிறார்கள். ஆடவர்கள் தங்களுக்கு இயற்கையாகவுள்ள செருக்கால் இவர்கள் விஷயத்தில் இன்னமும் அலட்சியமாக இருப்பார்களானால், கடைசியாக ஆணுலகத்துக்கே ஆபத்துதான். ஐரோப்பாவில் பெண்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டப் போராட்டம் நிகழ்த்தியதுபோல், இந்தியப் பெண்மணிகள் போராட மாட்டார்களென்று உறுதியாகக்கூறமுடியுமா? ஆகவே, ஆடவர்கள் தாராள மனப்பான்மையோடல்லாவிடினும், தங்கள் தற்காப்புக்கும் சுய நலத்துக்குமாகவாகிலும், பெண்மணிகளுக்குச் சமத்துவ உரிமையளிக்க முந்திக்கொள்ள வேண்டுவது அத்தியாவசியம். இல்லாவிடில் கூடிய சீக்கிரம் நாட்டில் அல்லி ராஜ்யம் ஏற்படுவது நிச்சயம் என்று "விகடன்" மீண்டுமொரு முறை எச்சரிக்கிறான்.

காலச்சக்கரம்

18631

தேர்தல் திருவிழா

வருகிறது! வருகிறது!! வந்துவிட்டது!!! அப்பாடா! வந்தேவிட்டது!!!! என்ன! என்ன! அதுதான் தேர்தல் திருவிழா! (ஏன்? அதைத் தேர்தல் தெருவிழா என்று கூறினால் கூடப் பொருந்தும்.) நமது நாடு திருவிழாக்களுக்குப் பேர்போனதல்லவா! எந்த சாமியின் பெயராலாயினும் திருவிழா நடக்காத நாளே கிடையாது என்றுகூடச் சொல்லலாம். அப்பேர்ப்பட்ட நம் நாட்டில் காருண்யம் மிக்க பிரிட்டிஷ் அரசாங்கத்தார் (பிரிட்டிஷ் சர்க்கார் ஆட்சி நம் நாட்டில் நிலவத் தொடங்கியதிலிருந்து பாமரர் முதல் பண்டிதர்வரை கொடுத்துவரும் அடைமொழி) நம் மக்கள் மீது கிருபைகூர்ந்து இப்புதுவிதமான தேர்தல் திருவிழாவை நம்மவர் கொண்டாட லைசன்ஸ் கொடுத்திருக்கிறார்கள். பாரம்பரியமாகப் பணத்தைத் தண்ணீர்போல் வாரியிறைத்துத் திருவிழா கொண்டாடிப் பழகிய நம்மவர்கள் இந்த நவீன தேர்தல் திருவிழாவின் மீது மோகங்கொண்டு அதை அதிவிமரிசையாகக் கொண்டாடி வருவதில் ஆச்சரியமொன்றுமில்லை. ஆனால், நமது சைவ வைஷ்ணவ கோயில்களில் நடக்கும் திருவிழாக்களுக்கும், இந்நவீன தேர்தல் திருவிழாக்களுக்கும் பலவிதங்களில் ஒற்றுமை இருக்கிறது. ஆலயங்களில் உற்சவ மூர்த்தியென்று ஒரு தெய்வச் சிலையை அலங்கரித்து வாகனங்களில் எழுந்தருளப் பண்ணி, ஊர்வலம் வருவது வழக்கம். இத் தேர்தல் திருவிழாவில் அபேட்சகர்களே உற்சவமூர்த்திகளாவர். அவர்களை அந்தந்த டிவிஷன்களிலுள்ள பொது ஜனங்கள் தேர்ந்தெடுத்து மோட்டார் முதலிய நவீன வாகனங்களில் ஊர்வலஞ் செய்வித்து, அனுப்பவேண்டும். ஜில்லா போர்டு, நகரசபை, மாகாண சட்டசபை, இந்தியா சட்டசபை ஆகியவைகளே இவ்வுற்சவ மூர்த்திகளுக்கு ஆலயங்களாகும். அவர்கள் அவ்வாலயங்களில் எழுந்தருளி ஜனங்களுக்கு வேண்டிய நன்மைகளைச் செய்வர். இவ்விதத் தேர்தல் திருவிழா அந்தந்த சபைகளின் காலவரையறைக்கு ஏற்றவாறு அடிக்கடி நம் நாட்டில் நடைபெறுவதுண்டு.

* *

சென்னை நகரசபை தேர்தல்

இப்போது சென்னை நகரசபைக்கு வருகிற அக்டோபர் மாத மத்தியில் தேர்தல் வருகிறது. இதுவரை சென்னை மாநகரம் 30 டிவிஷன்களாகப் பிரிக்கப் பட்டிருந்தது. அவற்றில் ஒன்றின்பின் ஒன்றாகப் பத்து பத்து டிவிஷன்களுக்குத் தேர்தல் நடைபெற்று வந்தது. ஆனால் இப்போதோ நம் நகரம் 40 டிவிஷன்களாகப் பிரிக்கப் பட்டிருப்பதோடு, அவ்வெல்லா டிவிஷன்களுக்கும் ஏக காலத்தில் தேர்தல்கள் நடைபெறுமெனத் தெரிகிறது. ஆகவே, அத் தேர்தலுக்கு எல்லாக் கட்சியார்களும் தங்கள் சார்பாக அபேட்சகர்களை நிறுத்தி வெற்றிபெற தீவிரமாக வேலை செய்து வருகிறார்கள். இதுவரை நடந்த முனிசிபல் தேர்தல்களைக் காட்டிலும், இப்போது நடக்கப் போகும் முனிசிபல் தேர்தல் மிகவும்

விசேஷ முடையதாகும். ஏனென்றால் இத் தேர்தலில் காங்கிரஸ் மகாசபை கலந்து கொண்டு அபேட்சகர்களை நிறுத்தி யிருக்கிறது. காங்கிரஸ் சட்டசபைப் பிரவேசத்தை ஏற்றுக் கொண்ட பின்னர், தேர்தல்களில் மற்ற கட்சிகள் இருக்கிற இடம் தெரியாமல் தொலைந்து போய் விட்டன. காங்கிரஸுக்கே பெருவாரியான வெற்றி கிடைத்து வந்திருக்கிறது. இரண்டு வருடங்களுக்கு முன் நடந்த இந்தியா சட்டசபை தேர்தலில் ஏற்பட்ட வெற்றி முழக்கம் இன்னம் ஓயவில்லை. அதன் உத்வேகம் சட்டசபை உப தேர்தல்களிலும், ஜில்லா போர்டுகளிலும் பெருவாரியான வெற்றியைத் தந்து வந்திருக்கிறது. ஆகையால் இத் தேர்தலிலும், காங்கிரஸ் அபேட்சகர்களுக்கே பெரும்பாலும் வெற்றி கிடைப்பது நிச்சயம் என்று "விகடன்" பெரிதும் நம்புகிறான்.

* * *

கட்டுப்பாடு அவசியம்

இந் நகாசபைத் தேர்தலில் காங்கிரஸ் சார்பாக தகுந்த அபேட்சகர்களைப் பொறுக்கி யெடுத்து நிறுத்த ஆந்திர, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர்கள் நான்குபேர் கொண்ட 'அட்ஹாக்' கமிட்டி யொன்றை நியமித்தனர். அக் கமிட்டியார் இந்த ஒரு மாதத்துக்கு மேலாகத் தங்களிடம் வந்த விண்ணப்பங்களைப் பரிசிலனை செய்து தீர்க்கமாக ஆலோசனை செய்தனர். கடைசியாக தாங்கள் தேர்ந்தெடுத்த அபேட்சகர்கள் ஜாபிதாவைச் சமீபத்தில் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கின்றனர். இதைக் கண்டு மேற்படி கமிட்டியால் தேர்ந்தெடுக்கப்படாத காங்கிரஸ் வாதிகளுக்கு அதிருப்தியும், மனவருத்தமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இவ்விஷயத்தில் "விகட"னுக்குஞ் சிறிது மனக்குறை யுண்டு. இப்போது வெளி வந்திருக்கும் ஜாபிதா தற்காலிகமானதென்றும், நிலைமையை யுத்தேசித்து இதில் அவசியமான மாறுதல்களுஞ் செய்யப் படுமென்றும் 'அட்ஹாக்' கமிட்டியினால் தெரிவிக்கப் பட்டிருப்பதால், அபிப்பிராய பேதத்துக்கு இடந்தரக் கூடிய சில இடங்களில் அவசியமான மாறுதல்களைச் செய்வார்கள் என்று "விகடன்" நம்புகிறான். ஆகவே, தங்களைத் தேர்ந்தெடுக்கவில்லை யென்ற காரணத்திற்காக, விண்ணப்பம் போட்ட காங்கிரஸ் காரர்கள் யாரும் அவசரப்பட்டு, எதிர்த்து நிற்கவோ பேசவோ கூடாது. காங்கிரஸ் கட்டுப்பாட்டிற் சிறந்தது. அதனாலேயே அது இதுவரை நடந்த ராஜீயப் போராட்டங்களில் வெற்றி யடைந்து வந்திருக்கிறது. விஷய முணர்ந்த உண்மைக் காங்கிரஸ்காரர்களுக்குக் கட்டுப் பாட்டைப் பற்றி அதிகங் கூறவேண்டியதில்லை. இதை புணாது நடந்து கொள்பவர்கள் வாக்காளர்களால் தண்டிக்கப் படுவார்கள் என்றுமட்டும் "விகடன்" இங் கெடுத்துக் கூற விரும்புகிறான்.

* * *

இதுவா விடுதலை?

"எல்லைப்புறக் காந்தி" என்ற பெயரால் பிரசித்தி பெற்றிருக்கும் கான் அப்துல் கபார்கான் சர்க்கார் விருந்தாளியாக இருந்துவந்தது அனைவருக்கும் தெரிந்த விஷயம். அவரது சிறைவாச காலம் முடிவடைந்து விட்டதென்றும், அவருக்கு விதிக்கப்பட்ட தண்டனை காலத்துக்கு ஒரு மாதத்துக்கு முன்பாகவே, அவரைச் சர்க்கார் விடுதலை செய்ய ஏற்பாடு செய்து வருகிறார்க ளென்றும் செய்தி யறிந்ததும் "விகடன்" மிகவுஞ் சந்தோஷித்தான். ஆனல் அவனது சந்தோஷத்துக்குக் களங்க மேற்படும்படியாக இப்போது சம்பவம் நடந்திருக்கிறது. சமீபத்தில் சர்க்கார் கான் அப்துல் கபார்கானை அல்மோரா சிறைச்சாலையி லிருந்து விடுதலை செய்தனர். ஆயினும், அவர் சிறைச்சாலையி லின்றும், வெளி வருவதற்குள், இரு தண தடையுத்தரவுகளை அவரிடஞ் சமர்ப்பித்தனர். அவை என்ன? அவர் எல்லைப்புற மாகாணத்துக்கும், பஞ்சாபத்துக்கும் செல்லக் கூடாது என்பதுதான். எல்லைப்புற பிரதேசம் நமது வீரர் கான் அப்துல் கபார்கான் பிறந்த நாடு என்பது

வாசகர்களுக்குத் தெரியாதிருக்க முடியாது. தம் தாய் நாட்டுக்குச் செல்லக்கூடாது என்று தடை செய்வதும் நியாயமோ! அவர் அங்கு அடியெடுத்து வைத்தால் என்ன குடி முழுகிப் போய் விடும்? இது சட்டமறுப்புக் காலங்கூட அல்லவே! சர்க்கார் வீண் பீதி கொள்வதற்கு. இதுபோன்ற சமயங்களில் சர்க்கார் தாராளமனப்பான்மை காட்டத்தவறி விடுவதைக் கண்டு "விகடன்" வருந்தாமலிருக்க முடியவில்லை. அப்துல் கபார்கான் சிறைவாசத்தில் ஏற்பட்ட அசௌகரியங் காரணமாக நோயாக இருந்துவருகிருர். அந்நோய் அவரைவிட்டு இன்னும் நீங்கவில்லை. அந்நோய் குணமாக வேண்டுமானல் அவர் தம் சொந்த நாட்டுக்கோ, அல்லது தற்போதைய நிலையில் அவரது தேகத்துக்கு ஒத்துக்கொள்ளக் கூடிய சீதோஷ்ண நிலையுள்ள நாட்டுக்கோ சென்று வசிக்க உரிமையிருக்க வேண்டியது அவசிய மல்லவா! கொஞ்ச நஞ்சமுள்ள சுதந்தரத்தையுங் கட்டுப்படுத்தினுல், உள்ள நோயோடு இம்மனசஞ்சலமும்கூட சேர்ந்து அதை அதிகமாக வல்லவோ பெருக்கும்? இதையெல்லாம் சிந்தித்துப் பாராது சர்க்கார் கான் அப்துல் கபார்கானுக்குத் தடை யுத்தரவு விதித்திருப்பது அவர்களுடைய குறுகிய புத்தியையே காட்டுகிறது. இவ்விதம் தடை யுத்தரவு போட்டுவிட்டு, ஒரு பக்கம் அவரது நோய் பரிகாரத்துக்கென்று சர்க்கார் கான் அப்துல் கபார்கானுக்கு மாதம் நூறு ரூபாய் அலவன்ஸ் அளிக்க ஏற்பாடு செய்து என்ன பயன்?

* * *

கல்கத்தா சர்வகலாசாலைக்கு ஜே!

இப்படி திடீரென்று "விகடன்" கல்கத்தா சர்வகலாசாலைக்கு ஜேப் போடுவதற்குக் காரண மென்ன என வாசகர்கள் ஆச்சரியப்படலாம். பாருங்களேன் சார்! இந்தியாவிலுள்ள எந்த சர்வகலாசாலைக் காகிலும் கல்கத்தா சர்வ கலாசாலைக்கு ஏற்பட்டிருக்கும் யோசனை தோன்றியதா! மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி யளிக்க வேண்டு மென்று அந்த சர்வகலாசாலை யதிகாரிகள் முடிவு செய்திருக்கிருர்களாம். கலைக் குதவாத ஏட்டுப் படிப்பை மாணவர்கள் மண்டைகளில் வலுக் கட்டாயமாக ஏற்றி மூளைகளைத் திருப்பிடிக்கச் செய்துவரும் நமது சென்னை சர்வகலாசாலைக்கேனும் அல்லது மற்றெந்த சர்வ கலாசாலைக்கேனும் இந்த அத்தியாவசியமான அற்புத யோசனை தோன்றியதா! நீங்கள்தான் சொல்லுங்களேன். நமது நாட்டு மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி எத் துணை இன்றியமையாதது என்று "விகடன்" வாசக நேயர்களுக்கு எடுத்துக் கூற வேண்டியதில்லை. அரசியலில்—ஏன் சகல துறைகளிலும் தான்—மிதவாதியான நமது ஸர். பி. சிவஸ்வாமி ஐயர்கூட, கல்கத்தா சர்வகலாசாலையின் இம் முயற்சியைப் புகழ்ந்து பாராட்டுகிறுரென்ருல், அதன் மகத்துவத்தை அதிகம் விஸ்தரிப்பானேன்! இலக்கிய வளர்ச்சியிலும், கலையிலும், தேசபக்தியிலும்—ஏன் எல்லாத் துறைகளிலுமே—வங்காளம் மீசரப்பட்டு மற்ற மாகாணங்களுக்கு வழிகாட்டி வந்திருப்பதுபோல, மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி யளிக்கும் விஷயத்திலும் முன்னணியில் வந்திருப்பதைக் கண்டு யாரும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எனவே, தனது மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி யளிக்கத் துணிந்து முன் வந்துள்ள கல்கத்தா சர்வகலாசாலையை "விகடன்" பாராட்டாதிருக்க முடியுமா? ஆனல், அச் சர்வ கலாசாலையின் இந்த நன் முயற்சிக்குச் சர்க்காரால் தடை யேற்படாதிருக்க வேண்டுமே யென்பதுதான் "விகடனது" கவலை.

* * *

திருச்சி தலைவர் தேர்தல் முடிவு

திருச்சி நகரசபைத் தலைவர் தேர்தல் முடிவைக் கேட்டு "விகடன்" திடுக்கிட்டுப் போய் விட்டான். நகரசபை தேர்தலில் திரு. பி. ஆர். தேவர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டதை யறிந்ததே அவர் தான் தலைவராக வருவார் என்று பெரும் பாலார் கருதி வந்தனர். அந்

குள்ள நிலைமையும் அதுதான். திரு. தேவர் காங்கிரஸ் செல்வாக்கு பெற்றிருப்பதோடு, தனி ஹோதாவிலும் செல்வாக்குடையவர். மேலும் நகர சபை நிர்வாகத்தில் நன்கு பழகித் திறமை வாய்ந்தவர். இதையெல்லாம் உத்தேசித்துத்தான் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியார் திரு. தேவரை தலைவர் பதவிக்குச் சிபார்சு செய்தனர். ஆனால் முடிவு வேறு விதமாய்ப் போய் விட்டது. காங்கிரஸ் அங்கத்தினர்கள் 22 பேர் இருந்தும், காங்கிரஸ் கமிட்டி சிபார்சு திரு. தேவர் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படவில்லையென்றால், அதற்குக் காரணம் என்னவென்று கூறுவது? வேலூர் ஜில்லா போர்டு தலைவர் தேர்தல் காற்று இங்கும் வீசியிருப்பதை யறிந்து "விகடன்" வருந்தாமலிருக்க முடியவில்லை. உண்மைக் காங்கிரஸ் பக்தர்; பெரிய தியாகி எனக் கருதப்பட்டு வந்த ஸ்ரீமான் டி. எஸ். எஸ். ராஜனே காங்கிரஸ் கட்டுப்பாட்டை மீறி, ஸ்ரீ பொன்னையா என்பவரை (அவர் காங்கிரஸ்காரராய் இருந்தால் தான் என்ன!) ப்பிரேரேபித்து அவர் வெற்றி பெறுவதற்குத் துணையா யிருந்தா ரென்றால், யாரும் ஆச்சரியப் படாம லிருக்க முடியாது. அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரை வாழ்த்துகையில்; தாம் இவ்வாறு நடந்து கொள்ள நேர்ந்ததற்குக் காரணம் இன்னதென ஏதேதோ கூறினாலும், இவர் விரும்பிய தலைவர் பதவியைக் காங்கிரஸ் கமிட்டியார் இவருக்குச் சிபார்சு செய்யாததால், இவர் இவ்வாறு நடந்து கொண்டார் என்றே பொது மக்கள் பெரும்பாலுங் கருதுவார்கள். பதவி மோகம் மிக வலிமை கொண்டது. அது முற்றத் துறந்த முழு முனிவரையும், பெரிய தியாகியையும் கூட விடாதெனத் தெரிகிறது. இதையெல்லாம் பார்க்கும் போது, காங்கிரஸ் காரியக்கமிட்டி, காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவியை ஏற்கக் கூடாது என்றே தீர்மானிக்க வேண்டுமென்று "விகடன்" வற்புறுத்த வேண்டி யிருக்கிறது.

* * *

மூட்டைப்பூச்சி ஐயா! மூட்டைப்பூச்சி!

"மூட்டைப்பூச்சி ஐயா! மூட்டைப் பூச்சி! இங்கு ஒருவரும் உட்கார்ந்திருக்க முடியாது!" இவ்விதம், சமீபத்தில் நடைபெற்ற லாகூர் நகரசபைக் கூட்ட மொன்றில் டாக்டர் ஷுஜாஉல்லா என்ற அங்கத்தினர் திடீரென தம் இருக்கையி னின்றுந் துள்ளியெழுந்து கதறினர். இந்த முறையீட்டை ஆதரித்து ஸ்ரீமதி ஷேல் என்ற பெண் அங்கத்தினர், "இந்த மூட்டைப் பூச்சிகள் எங்கள் நாற்காலிகளி னின்றும் ஒழியும் வரை கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்று நான் பெண் அங்கத்தினர்கள் சார்பாக ஒரு அவசரப் பிரேரேபணை கொண்டு வருகிறேன்!" என்று ஒரு அவசரப் பிரேரேபணை கொண்டு வந்தார். டாக்டர் அந்த அவசரப் பிரேரேபணைக்குரிய அவசியத்தைக் குறிப்பிடும்போது, 'நகர சபைக் காரியதரிசி உடனே பழைய நாற்காலிகளை அப்புறப்படுத்தி விட்டுப் புது நாற்காலிகளைக் கொண்டு வந்து போடா விட்டால், சபையில் எந்த தீர்மானத்தையும் வாதித்து நிறைவேற்றி வைக்க முடியாது' என்று நகரசபைத் தலைவரிடம் முறையிட்டார். அத்துடன் அவர் நிற்கவில்லை. "காரியதரிசி எங்கள் நாற்காலிகளில் ஏதேனும் ஒன்றில் வந்து உட்கார்ந்து பார்த்தாரானால், அவர் எங்களது சங்கடமான நிலைமையைக் கட்டாயம் உணர்வார்" என்றும் எடுத்துக் காட்டினர். அவசரப் பிரேரேபணை சபையில் நிறை வேறா விட்டாலும், இந்த அங்கத்தினர் கூறிய புகார் உண்மைதானா என்று அறிய காரியதரிசி அவரது யோசனையைப் பரிசீலனை செய்து பார்த்திருப்பார் என "விகடன்" நம்புகிறான்.

சீமாட்டி கார்த்தியாயினி

("ஜீவா")

ஆறுவது அதிகாரம்.

கார்த்தியாயினியின் காதல் வாழ்க்கை.

"கார்த்திகா! கண்ணே!"

"................................"

"என்ன தலையைக் குனிந்த வண்ணம் ஏதோ யோசித்துக் கொண்டிருக்கிறாய்?"

"................................"

"காதற்கிளியே! என்னைப் பார்! இன்னமும் என்ன சிந்தனை?"

"................................"

சிவசைலம் தன்னருகில் அமர்ந்திருந்த கார்த்தியாயினியின் அழகிய முகத்தை நிமிர்த்திப் பிடித்து, "கார்த்திகா! என் மீது உனக்கு ஏதேனுங் கோபமா? உன் மௌனத்துக்குக் காரணந்தானென்ன?................................" என்று கேட்டான்.

கார்த்தியாயினி அப்போதும் வாய் திறக்கவில்லை.

சிவசைலம் மேலும் பேசத் தொடங்கி, "ஒரு வேளை இவ்வாறு இருக்குமோ! செல்வத்தில் பிறந்து செல்வத்தில் வளர்ந்து செல்வச் சீமானுக்கு வாழ்க்கைப் பட்டு, ராஜபோகத்தை யனுபவித்து வந்த நாம், கேவலம் சாதாரண குமாஸ்தா வேலை செய்யும் ஏழை வாலிப னொருவனை நம்பி வந்து விட்டோமே! இவனால் நாம் என்ன இன்பம் அநுபவிக்க முடியும்? ஊரார் தான் நம்மை என்ன நினைப்பார்கள்? இனி நம் நிலை யென்ன? என்று யோசிக்கிறாய். போதும்!................" என்று அவள் முகத்தைக் கூர்ந்து கவனித்த வண்ணங் கூறினான்.

இது வரை பேசாதிருந்த கார்த்தியாயினி இம் மொழியைக் கேட்டதும் சிவ

சைலத்தை நோக்கி, "என்ன சொன்னாய் சிவா! நீ கூறுகிறபடி எனக்கும் உனக்குமுள்ள தகுதியின் தார தம்மியத்தைக் கவனித் திருப்பேனாயின், சகல சம்பத்தையும் ஒரு நொடியில் உதறித் தள்ளிவிட்டு உன்னோடு வந்திருப்பேனா?—உற்ற கணவனையே துச்சமாக நினைந்து புறக்கணித்து விட்ட நான் இப்பேதை மக்களின் பிதற்றுரைகளையா பொருட்படுத்துவேனென்று நீ நினைக்கிறாய்?—நீ கூறுகிறபடியே, நான் ஒன்றையும் ஆராயாது உன் காதலில் மயங்கி வீட்டை விட்டு ஓடிவந்து விட்டதாகவே வைத்துக் கொள். இப்போது உனது உண்மை நிலையையும், என்னை எவ்வாறு காப்பாற்றுவாய் என்பதையும் யோசித்து பார்த்து என்ன பயன்? உன்னை விட்டு விட்டு திரும்பவும் என் மாளிகைக்குப் போய் விட முடியுமா? விஷயம் வெகு தூரத்துக்கு மிஞ்சிப் போய் விட்ட பின்னர், என்ன நினைத்து தான் என்ன பயன்? எவ் விதத்தாலும் கணவனுடனோ, மற்ற உறவினர்களுடனோ பழைமை போல் ஒன்று சேர முடியாத ஒரு நெருக்கடியான நிலையையுண்டு பண்ணி விட்டுப் பின்னர் அது பற்றி நினைந்து வருந்துபவள் பைத்தியக்காரியாக அல்லாது வேறு யாராக இருக்க முடியும்? என்னை உலக இயல்பு இன்னதென அறியா அவ்வளவு பெரிய பேதையென்றா நினைத்துக் கொண்டாய்?—இவ்வளவு நாட்களாக என்னோடு நெருங்கிப் பழகியும் என் மனப்பான்மையை இன்னும் சரியாக அறிந்து கொள்ள வில்லையென்றால், அது எனக்கு ஆச்சரியத்தையே தருகிறது. மற்றொரு முறை இவ்வித அசட்டுரைகளைப் புகலாதே! தெரியுமா!" என்று அன்பாகக் கடிந்து பேசினாள்.

கார்த்தியாயினியின் வலது தோளைக் கையால் வருடிக் கொண்டிருந்த சிவசைலம் கைகளை யெடுத்துக் கொண்டு பயந்தவன் போல் பாவனை செய்து, "சீமாட்டி! கோபித்துக் கொள்ளாதீர்கள். தெரியாது கூறி விட்டேன். இனிமேல்................" என்று குறும்பாக பேசிக் கொண்டே வருகையில், கார்த்தியாயினி இடைமறித்து, "அன்ப! என்னை இவ்விதம் ஏளனஞ் செய்ய வேண்டுமென்று எவ்வளவு நாள் காத்திருந்தாய்?—சீமாட்டி என்று என் தலையில் எழுதி வைத்திருக்கிறதா? அல்லது அப் பட்டம் எனக்குப் பிறப்புரிமையா என்ன?—இப் பெருமைப் பாடுகளெல்லாம் மக்கள் தாங்களாகச் செயற்கையில் உண்டாக்கிக் கொண்டதன்றி, இயற்கையில் நமக்குள் உயர்வு தாழ்வுண்டா?—நீ கூட இப்போலிப் பெருமைகளைப் பெரிதாகக் கருதுகிறாயா என்ன?" என்று கேட்டாள்.

சிவசைலம் கார்த்தியாயினியின் களங்கமற்ற மொழியில் மயங்கிப் போய் "கண்ணே? நான் அப்படி யெல்லாம் ஒன்றும் விபரீதமாக நினைக்க வில்லை. ஏதோ ஒரு விதமாயிருக்கும் உனக்குக் குதூகலத்தையும், உற்சாகத்தையும் அளிக்க வேண்டுமென்றே இவ்விதம் வேடிக்கையாகப் பேசினேன். அதை நீ வேறு விதமாக நினைத்துக் கொள்ளாதே!—அதிருக்கட்டும், கார்த்திகா! அதோ பார்! இயற்கை யன்னை வழங்கும் அற்புதக் காட்சியை! ஆஹா! ஆ! என்ன அழகிய தோற்றம்! எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று செழித்துத் தழைத்திருக்கும் செடி கொடி மரங்களைத் தாங்கிக் கம்பீரமாய் நிமிர்ந்து நிற்கும் இப் பொதிய மலைக்கு இமய மலையும் ஈடாகுமா! இம் மலை மீதிருந்து ஓடி வரும் வெள்ளருவி ஒருவித இனிய ரீங்காரத்தோடு கீழே விழும் அழகிய காட்சியை எம் மொழி கொண்டு வருணிப்ப தென்று எனக்குத் தெரியவில்லை. மேற்றிசை யெல்லாம் பொன் மயமாக்கி மறையும்—கால் சாயும்—சூரியனது கதிரொளி அந் நீரருவி மீது பட்டு பள பளக்கச் செய்து அழகினுக் கழகை யல்லவோ உண்டு பண்ணுகிறது. இந் நீர் வீழ்ச்சியின் அழகிய தோற்றத்தை இப்படியே உட்கார்ந்து எப்போதும் சலிக்காது பார்த்துக் கொண்டிருக்கலாம் போலிருக்கிறதே! நீ என்ன நினைக்கிறாய் கண்மணி!.................." என்று கேட்டான்.

அடாடா! உன்னை இதுவரை கட்டிள மங்கையர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் கள்வன் என்று மட்டுமல்லவோ நினைத்திருந்தேன்! நீ ஒரு பெரும் புலவனாகவும் இருப்பது இப்போதல்லவா தெரிந்தது. எம் மொழியால் வருணிப்பது என்று பீடிகை போட்டுவிட்டு, எவ்வளவு அழகாக இக் குற்றால நீர் வீழ்ச்சியின் சிறப்பை உனது சாதுரிய மொழிகளால் சித்திரித்துக் காட்டிவிட்டாய்! வெண் நுரைகளைத் தள்ளிக் கொண்டு ஓடிவந்து விழும் இவ் வருவியின் அழகைக் கண்டு மகிழ்வதா! காதல! உன் சொல்லழகைக் கேட்டு மகிழ்வதா! என்று எனக்குத் தெரியவில்லை............" எனப் பலப்பட பாராட்டிப் பேசி மகிழ்ந்தாள்.

* * *

இக் காதலர்கள் இப்போது குற்றாலத்தி லிருக்கிறார்கள் என்பதைச் சொல்லாமலே வாசகர்கள் அறிந்து கொள்வார்கள். காந்திமதி நாதம் பிள்ளையோடு ஆத்திரமாகப் பேசி விட்டு வெளியேறியதும் உணர்ச்சி வயப்பட்டவளாய் உலகத்தையே மறந்து போகுமிடம் இன்னதெனத் தெரியாது பைத்தியம் பிடித்தவள்போல் புறப்பட்டு விட்ட நம் கதாநாயகி கார்த்தியாயினி இவ்வித சந்தர்ப்பத்தையே எதிர் பார்த்துக் கொண்டிருந்த சிவசைலத்தின் உதவியால் சென்னை நகரைவிட்டு வெளியேறி விட்டாள் என்பதை நாம் விரிக்கவேண்டியதில்லை. இவ்விதம் காதல ரிருவருஞ் சேர்ந்து பல ஊர்களிலுஞ்சுற்றிக் கடைசியாகத் தங்கள் இன்ப வாழ்க்கைக்குக் குற்றாலமே ஏற்றஇடம் என்று தேர்ந்து, இயற்கை யன்னை களி நடம் புரியும் அந்நாட்டுக்குச் சென்றனர். அங்கு அவர்கள் வந்து ஒரு மாதத்துக்கு மேலாகியது. சிவசைலம் தனது உத்தியோகத்தைப் பற்றிக் கவலை கொள்ளவேயில்லை. அவனிடம் கொஞ்சம் பணமிருந்தது. கார்த்தியாயினி மனங் குதுகலிக்க அவளது விருப்பப்படி யெல்லாம் தாராளமாகப் பணத்தைச் செலவு செய்துவந்தான். குற்றாலம் இப் புதுக் காதலர்களுக்கு மிகுந்த குதுகலத்தைத் தந்துவந்தது. ஒவ்வொரு நாளும் அவர்கள் குற்றால நீர் வீழ்ச்சியில் குளித்து விளையாடியும், மாலைநேரங்களில் பொதியமலை மீதேறியும், நீர் வீழ்ச்சி விழுமிடத்தைச் சுற்றியுள்ள இடங்களில் உலவியும் காத லுரையாடிக் களிப்புடன் பொழுது போக்கிவந்தனர். கார்த்தியாயினி சிவசைலத்தின்மீது கொண்ட கட்டுக்கடங்காக் காதலினால்தன் குடும்பத்தின் உயர்நிலை, பின் விளைவு முதலியவற்றையெல்லாங் கருதாது ஒரு கொடியில் யாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு அவனோடு வந்து விட்டாள்; ஆயினும் தன் அருமைக் குமாரன் அம்பிகாபதியின் நினைவு மட்டும் அவளுக்கு அவ்வப்போது தோன்றி அவள் மனதை வாட்டிவந்தது. ஒரு நிமிடமும் விட்டுப் பிரியாது இருந்து வந்த தன் அருமருந்தன்ன மகன் இப்போது தன் பிரிவையாற்றாது எவ்வாறு துடிதுடிக்கிறானோ என்று நினைக்கும்போது கார்த்தியாயினியின் கண்களில் நீர் ஆறாக வழிந்தோடும். ஆனால் தான் இவ்வாறு வருத்தப்படுவதைச் சிவசைலம் அறியாதவாறு பெரும்பாலும் அவள் மறைத்துவந்தாள். நாம் மேற்குறித்த அன்றும் அவள் திடீரென தன் மகனை நினைத்துக் கொண்டாள். அடுத்தது காட்டும் பளிங்குபோல், நெஞ்சங் கடுத்தது காட்டு மல்லவா! எனவே, தன் காதலி எதையோ நினைத்துக்கொண்டு உள்ளூற வருந்துகிறாள் என்பதைச் சிவசைலம் அறிந்துகொண்டு, அவள் கவனத்தை வேறு வழியில் ஈர்க்கவே, அவன் மேலே குறித்தபடி வேடிக்கையாகப் பேச்சை யாரம்பித்தான்.

* * *

கார்த்தியாயினி தன்னை மிகவும் பாராட்டிப் புகழவே, சிவசைலம் மகிழ்ச்சிப் பெருக்கால் மெய்ம்மறந்து போனான். எனவே, அவன் அக்களிவெறியில், "கார்த்திகா! காதற் களஞ்சியமே! இப் பரந்த உலகம் யாருக்காகப் படைக்கப் பட்டிருக்கிறது என நினைக்கிறாய்? நம் போன்ற உண்மைக் காதலர்கள் இன்ப மனுபவிப்பதற்காகத்தான். அதிலும், இக்குற்றாலம்

நமக்காகவே சிருஷ்டிக்கப்பட்டது என்று கூறினால் மிகையாகாது. நானறிந்த மட்டில், காதலர்கள் கலந்து மகிழ்வதற்கு இதைவிட ஏற்ற நாடு இவ்வுலகி லிருப்பதாகத் தெரியவில்லை. இந்திர லோகமும் இதற்கு இணையாகாதென்றே துணிந்து கூறுவேன். அதிலும் நாம் அநுபவிக்கும் இக் காதலின்பத்துக்குச் சுவர்க்க போகமும் ஈடாகாது. இத்தகைய உண்மையான காதலின்பத்தை யநுபவிக்க மாட்டாதவர்கள் இவ்வுலகத்தைத் துன்பம் நிறைந்ததென்றும், அநித்யமானதென்றுங் கூறுகிறார்கள் அறிவிலிகள்! அவர்களை அதிர்ஷ்டஹீனர்கள் என்பது வேறென்னவென்று கூறுவது!—கட்டிக் கரும்பே! இயற்கைத்தாய் சமைத்திருக்கும் இந்த இன்ப நிலயத்தில் இப்போது நாம் காதற்றெய்வங்களாக எழுந்தருளி யிருக்கிறோம். இப் பொதியமலை யடிவாரத்தில் நீர் வீழ்ச்சிச் சாரல் பனிநீர்போல் தெளிக்க மந்தமாருதக்காற்று ரமணீயமாக வீச இவற்றை யனுபவித்துக் கொண்டு இன்பமே ஓருருவமாய் அமர்ந்திருக்கும் நாமல்லவோ புண்ணியசாலிகள்! இன்ப மனுபவிப்பதில் நமக்கிணையாக யார் இருக்கமுடியும்? நாம் அனுபவிக்கும் இன்பத்தைத் தடுப்பவர் தான்யார்? யார்தான் நம்மை என்ன செய்யமுடியும்?— கார்த்திகா கண்ணே! இவ்வுலகில் நமக்கு இனி துன்பம் ஏதாவதுண்டா?" என்று பெருமித வுணர்ச்சியோடு கேட்டான்.

கார்த்தியாயினி நிமிர்ந் துட்கார்ந்து, "ஓ! இருக்கிறது" என்று சாவதானமாகச் சொன்னாள்.

சிவசைலம் திகைத்து, "அது என்ன?" என்று கேட்டான்.

"கண்ணீர்த் துளிகள்."

"எங்கே? காணோமே!"

"தற்சமயம் அவை யடங்கி யிருக்கின்றன."

"என்ன விளையாடுகிறாயா? கண்ணே!"

"இல்லை அன்பா! உண்மையைச் சொல்லுகிறேன். நான் துன்பத்தை யநுபவிக்கிறேன். நான் கண்ணீரைச் சிந்துகிறேன்."

"ஏன்?"

"ஏனென்றால் நான் மகிழ்ச்சிக் கடலில் திளைத்திருப்பதுதான் காரணம். நான் எதையோ அநுபவிப்பதாகவோ—ஏதோ உயிர் வாழ்வதாகவோ மட்டும் நினைப்பதில்லை."

"கார்த்திகா! உனக்கு மணிவாசகப் பெருமானது இத்திருப்பாடல் ஞாபகமிருக்கிறதா?

"இன்றெனக்கு அருளி இருள்கடிந்து [உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்
நீயலால் பிறிதுமற்று இன்மை
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்து [தேய்ந்து ஒன்றாம்
திருப்பெருந் துறையுறை சிவனே!
ஒன்று நீயல்லை அன்றி ஒன்றில்லை
யார்உனை அறியகிற் பாரே."

என்று சிவசைலம் மிக உருக்கமாகப் பாடினான்.

"என்ன இனிமை! என்ன இனிமை!"

"அதிலென்ன சந்தேகம்? கண்ணே! 'கன்னல் பாகில் கோற்றேனில் கனியில் கனிந்த கவி'யல்லவா அது!"

"காதலா! இச்சால் மிகவும் குளிர்ச்சியைத் தருகிறது" என்று கார்த்தியாயினி கூறியவண்ணம் நகர்ந்துவந்து சிவசைலத்தின் மார்பின் மீது சாய்ந்து அவனது அழகிய வதனத்தைக் கனிவோடு நோக்கினாள்.

சிவசைலம் கார்த்தியாயினியின் கூந்தலை நீவிவிட்டு அவளது இடுப்பில் கை கொடுத்து ஒரு கையால் அணைத்து அவளது செவ்வாயிதழில் அழுந்த முத்தமிட்டான். பூதவுடலோடு சுவர்க்கம் புகுவார் போல் கார்த்தியாயினி அவனது பிணைப்பில் கட்டுண்டு மெய்ம் மறந்திருந்தாள்.



வாழ்க்கையில் ஓர் காட்சி

—:(o):—

("இச்சு.")

[இது ஒரு உண்மைக்கதை. சந்தேகமிருந்தால் வாழ்க்கையின் சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். இல்லையானால் அநுபவத்தையே கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். பிறகு உண்மை புலப்படும்.]

I

"சாமி!" என்று உரக்கக் கூவினான் தலையாரி முத்துதேவன்.

"யாரது?" என்ற குரல் வீட்டினுள்ளிருந்து வந்தது.

"நான்தான்" என்றான் முத்து.

"தலையாரி முத்துதேவனா? வா என்ன சங்கதி?" என்று கேட்டுக்கொண்டே ரகுபதி அய்யர் வெளியே வந்தார்.

"இஸ்திப்பணம் கொண்டாரச்சொன்னாரு எஜமானு இன்று" என்று கேட்டான் முத்து.

இதைக்கேட்ட ரகுபதி அய்யரின் கால்கள் தளர்ந்தன. மார்பு படபடத்தது. தேகம் வியர்த்து விட்டது. "நீ போ, நான் வருகிறேன்." என்று சொல்லியனுப்பினார் ரகுபதி அய்யர்.

சந்தான கிருஷ்ணய்யருக்குக் கொஞ்சம் பூஸ்திதி யுண்டு. அவருக்கு மங்களமும் ரகுபதியும் இரு குழந்தைகள். இவர்கள் செல்வமாய் வளர்ந்து வந்தார்கள். ரகுபதி இங்கிலீஷ் படித்துப் பட்டம் பெறவேண்டுமென்று தகப்பனார் விரும்பினார். ஆனால் அது ஈடேறவில்லை. 'விளையும் பயிர் முளையிலே' என்பதற்கிணங்க ரகுபதிக்கு எழுதப் படிக்கத் தெரிவதற்கே நான்கு வருஷங்களாயின. என்ன செய்வார் சந்தான கிருஷ்ணய்யர்.? இயன்ற மட்டும் பார்த்தார். ரகுபதியின் மூளை ஒரே பிடிவாதமாய் இருந்து விட்டது.

II

சந்தான கிருஷ்ணய்யர் தன் ஆஸ்தியில் பாதியை மூலதனமாகக்கொண்டு ஜவுளிக்கடை வைத்திருந்தார். ரகுபதியை அடிக்கடி கடைக்குக் கூட்டிக் கொண்டு போவார். கணக்குகளை எழுதச்செய்வார். சொல்லி என்ன பயன்? அவனது மூளை அதையும் லட்சியம் பண்ண வில்லை.

விட்டார் வரவேயில்லை. அவனது கீர்த்தி அவ்வளவு சீக்கிரம் பரவி விட்டது. கடைசியாக ஒரு இடம் அமைவதா யிருந்தது. பேச்சு முடியும் போது வரதட்சணை பூஜ்யத்தில் நின்றது. கௌரவக் குறைவென்று நினைத்து சந்தான கிருஷ்ணய்யர் இதற்கு உடன்படவில்லை. அதன் பிறகு பெண்ணொன்றும் கிடைக்கவில்லை. இந்த

அடுத்த இதழில்!

* மூன்று வைரங்கள் —எஸ். முத்துஸ்வாமி.
* அதிசய முத்தம் —வி. ராமமூர்த்தி.
* இணையற்ற காதல் —"கண்ணாடி"
* மங்கள விலாசத்தின் மர்மம் —வி. எம். சாமி.
* வறுமைக் கொடுமை —அனந்தன்.
* மணிக்கெதிரில் பிசாசு —அருஜன்.

ஆவலுடன் எதிர்பாருங்கள்.

மங்களாம்பாள் கல்யாண வயதை நெருங்கி விட்டாள். பெற்றோர்களுக்கு இது கவலையான காலம். ரகுபதியின் வரதட்சணையை மங்களத்துக்கு ஈடு செலுத்திக் கைப் பொறுப்பு இல்லாமல் கல்யாணங்களை முடிக்கவேண்டுமென்று சந்தான கிருஷ்ணய்யர் யோசனை பண்ணினார். ஆனால் இரண்டொருவர் ரகுபதியை பார்த்துவிட்டுப் போனபிறகு வேறு பெண்

நிலையில் மங்களத்தின் கல்யாணத்தை எவ்வளவு நாள் தாமதப்படுத்த முடியும்? அவர் மனதுக்குப் பிடித்த இடமாயிருந்தால் வரதட்சணை இவருடைய கையை மிஞ்சியிருக்கும். அது குறைவாயிருந்தால் அந்த வரனையும் அவனது குடும்பத்தையும் இவரே ஆதரிக்க வேண்டி வருகிறது. இவர்களையெல்லாம் விட்டு விட்டு, சுமாரான அந்தஸ்துள்ள வரன் ஒருவனைத்

தேடிப் பிடித்தார். மங்களத்துக்குக் கல்யாணமும் நடந்தது. அந்தச் செலவுகளுக்காக மிருந்துள்ள தமது சொத்துக்களின் பேரில் கடன் வாங்கி விட்டார்.

III

ஒருநாள் இராத்திரி சந்தான கிருஷ்ணய்யர் ஜவுளிக்கடை திடீரென்று தீப்பற்றிக் கொண்டது. தீயணைக்கத் தகப்பனும் மகனும் ஓடினுர்கள். ஓடி என்ன பிரயோஜனம்? இவர்கள் போய்ச் சேருமுன் கடை வெந்து சாம்பலாகி விட்டது. வருத்தத்துடன் வீடு திரும்பினுர்கள். பட்டகாலிலே படுமல்லவா?

சந்தான கிருஷ்ணய்யர் வீட்டையடைந்ததும் ரகுபதி அய்யரின் மனைவி சாஸ்வதி அல்லோல ஹல்லோலமாய் ஓடிவந்தாள். கதறினுள் அந்தோ! அவளுடைய நகைக ளெல்லாம் களவு போய்விட இதுதானு சமயம்? அவருடைய கவனத்தை ஜவுளிக்கடைக் கிழுத்தது திருடர்களின் சாமார்த்தியமா யிருக்குமா?

சந்நான கிருஷ்ணய்யர் அடைந்த துக்கத்திற்களவேயில்லை. தாதிர்ஷ்டம் இன்னும் அவரை விட்ட பாடில்லை. கடைக்காருக்கு வட்டி கொடு படவில்லை. வேறு வழியில்லாமல் அவர்கள் வியாஜ்யமும் தொடர்ந்து விட்டார்கள். இதே ஏக்கமா யிருந்த சந்தான கிருஷ்ணய்யருக்கு மூளை குழம்பிவிட்டது. எந்த வியாதியோ, படுத்த படுக்கையா யிருந்து ஒரு மாதத்திற்குள் காலமாய் விட்டார்.

ரகுபதி அய்யரின் உலகம் இருள் சூழ்ந்து விட்டது. குடும்ப பொறுப்பு தன் தலையில் விழுந்தது; இவர் திகைக்கலானுர். சாஸ்வதிக்கு இரண்டு வாரமாக விஷசுரம் அடித்துக் கொண்டிருக்கிறது; வைத்தியர் வந்துபோய்க் கொண்டு தானிருக்கிருர். ஆனுல் போகும் உயிரைக் கட்டிப் பிடித்து வைக்க அவரால் முடியுமா? தன் மக்கள் நால்வரையும் விட்டு விட்டு வாழ்க்கையின் தளைகளை யுடைத்தெறிந்து சாஸ்வதி மறைந்துவிட்டாள். கல்வியும் செல்வமுமில்லாத ரகுபதி அய்யருக்கு மானம் மட்டும் போய்விடவில்லை. இப்படிப் பட்டவருக்கு மாமனுர் வீட்டு நினைப்பு எப்படி யுண்டாகும்? இனிமேல் என்ன வேலை செய்து சம்பாதிக்கப் போகிருர்? எந்த வேலைக்குத்தான் இவர் தகுதியுள்ளவர்! நிலங்களும் வீடும் ஜப்தியாய் விட்டன. மகளுதும் கிடைக்காது போலிருந்தது. கிஸ்தி போட்டால் தானே! தெரிந்தவர்களிட மெல்லாம் கேட்டுப் பார்த்தார். ஆனுல் எல்லோரும் கையை விரித்து விட்டார்கள். இதை எல்லாம் பற்றி ரகுபதி அய்யர் என்னவோ யோசித்துக் கொண்டிருந்தார். இந்த நிலைமையில்தான் தலையாரி முத்து தேவன் வந்து கிஸ்திப் பணத்தைக் கொண்டு வரும்படி நெருக்கினுன்.

IV

ஒரு பெரிய பாறை தலையி லிருந்து கொண்டு தம்மை அமுக்குவதுபோல் ரகுபதி அய்யருக்குத் தோன்றிற்று. தலையாரி மறுபடியும் வாசலில் வந்து நின்றுன். மறுநாள்தான் கிஸ்திக்குக் கடைசி வாய்தாவாம். கொடுக்கத் தவறினுல் வீட்டிலுள்ள ஜங்கம சொத்துக்கள் பறிமுதலாய் விடுமென்று கிராமாதிகாரி சொல்லியனுப்பிவிட்டார். ரகுபதி அய்யரின் தலை சுழன்றது; ஏதோ சமாதானம் சொல்லித் தலையாரியை அனுப்பிய பின் யோசனையி லாழ்ந்தார். திடீரென்று குதித்தெழுந்தார். மனதில் ஒருசாந்தி, முகத்தில் ஒரு தெளிவு; கண்ணில் ஒரு ஒளி; மறுபடியும் ஒரு மங்கலான பார்வை. அவருக்கு, உலகத்தின் மீது இருந்த சிறுபசையும் இப்பொழுது அவரை விட்டு விலகி நெடுந்தூரம் சென்றுவிட்டது. எங்கே பார்த்தாலும் வெறுப்பு *வெறுப்பு *வெறுப்பு. கையெழுத்து மயங்கும் சமயம் வீட்டு கதவுகளைத் தாளிட்டுக்கொண்டார். விடியாத இருளில் நுழைந்துவிட்டார் ரகுபதி அய்யர்.

"ஜஸ்டிஸ் அம்மா ஜல்டலோ!"

"சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சிப் பிரசாரம் அதன் மந்திரிகளாலும், ஸர். ஏ. பீ. பாத்ரோ போன்ற தலைவர்களாலும் வெகு மும்மரமாக நடக்கிறது."

இது ஒரு பத்திரிகைச் செய்தி. இதை நமது சித்திரக்காரர் மேற்கண்டவாறு சித்திரித்துக் காட்டியிருக்கிறார்.



ஒரே ஒரு வெளவால்

—(0)—

(மைனா.)

எங்கள் ஊரில் ஒரே ஒரு வெளவால் இருக்கிறது. இது வீட்டு வெளவால், காட்டு வெளவால், பழம் தின்னும் வெளவால் முதலிய வெளவால்களைச் சேர்ந்ததல்ல. இது ஒரு அரசியல் வெளவால். அரசியல் வெளவால் என்று சொல்லும்பொழுது, என்னமோ இது உலகத்திலுள்ள அரசியல் கொள்கைகளைப் படித்துக் கரைத்துக் குடித்து விட்டதாக நினைக்காதீர்கள். இதற்குத் தெரிந்த அரசியலெல்லாம் வயிற்று அரசியல்தான். உலகத்திலுள்ளவர்கள் எல்லாம் முட்டாள்கள்; தான் மாத்திரம் புத்திசாலி என்று நினைக்கக் கூடியது. எல்லோரையும் திருப்திப்படுத்தி, எல்லோருடைய தயவும், நன்மதிப்பும் பெறுவதற்கு ஆசைப் படைத்தது. 'பாம்புக்குத் தலையும், மீனுக்கு வாலும்' காண்பித்து எல்லோரையும் ஏமாற்றுவதுதான் இதன் தொழில். இவ்விஷயம் எங்களுக்கெல்லாம் வெகுநாள் தெரியாமல் இருந்தது. ஆகையினால்தான் எங்களூரிலுள்ள பட்டம், பதவி, அதிகாரம் எல்லாம் இது வரையிலும் இதற்குக் கொடுத்து உதவி வந்தோம். இது இவ்வளவு நாளாக 'வாயில் பல்லை வைக்காமல், வயிற்றில் வைத்துக் கொண்டிருக்கின்றது' என்று ஒரு சிறு சம்பவம் இதைக் காட்டிக் கொடுத்து விட்டது. அன்று முதல் இதன் அரசியல் வாழ்வு 'பொல பொல' என்று உதிர்ந்து விட்டது. அச் சம்பவம் பின்வருமாறு:-

எங்கள் ஊரை கொஞ்சகாலமாக வேற்றூர்க்காரன் ஆளுகின்றான். ஆகையினால் எங்கள் ஊரில் இரண்டு கட்சிகள் உண்டு. ஒரு கட்சி 'வெளியூர்க்காரன் எங்களை ஆளக்கூடாது' என்று சொல்கின்றது. அதற்கு பெயர் மிருகக்கட்சி. இன்னொன்று பறவைக்கட்சி இதுதான் நான் சேர்ந்திருக்கும் கட்சி. எங்கள் கட்சி அயலூர்க்காரன் நம்மை ஆண்டால்தான் நமக்கு புத்திவரும்; நமக்குள் இருக்கும் வித்தியாசங்கள் போகும் வரையில் அவன்தான் ஆளவேண்டும்; ஆகையினால் அவன் இருக்க வேண்டுமென்று சொல்கின்றது. 'முதலில் அயலானைத் துரத்திவிட்டால், பின் நமக்குள் இருக்கும் வேற்றுமைகளை ஒழித்து விடலாம்; ஆகையினால் அயலானோடு சண்டை போடும்பொழுது, பறவைக்கட்சியும் தங்கள் கட்சியோடு சேர வேண்டு'மென்று மிருகக் கட்சியார், எங்கள் கட்சியாரை அழைக்கின்றனர். ஆனால் நாங்கள் மிருகக்கட்சியில் நரிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. 'அம்பாதிரி நரிகள் ஆதிக்கம் செலுத்தும் வரையிலும் மிருகக்கட்சியாரோடு சேர மாட்டோம்' என்று கூறுகின்றோம். இதை முன்னிட்டு இந்த இரண்டு கட்சிகளுக்குள் எப்பொழுதும் சண்டையும், சச்சரவுமாகவே

இருக்கும். இதைப் பார்த்து அயலூர் காரன் 'கொம்மாளம்' போடுகின்றான்.

இப்படி யிருக்கும்பொழுது, நான் முன் கூறிய வௌவால் மாத்திரம் ஒரு கட்சியிலும் சேரவில்லை. ஆனால் அந்தரங்கத்தில் 'உங்கள் கட்சிதான் பிடிக்கின்றது; சில காரணங்களினால் பகிரங்கமாக உங்கள் கட்சியில் சேரவில்லை' யென்று எங்களிடம் இயம்புவது வழக்கம். நாங்களும் இதை நம்பி யிருந்தோம். ஆகையினால்தான் இது எங்கள் கட்சியில் சேராவிட்டாலும், இதை எங்கள் கட்சியினராகவே கருதி எங்கள் ஊருக்கு ஒரு பெரிய ஆளாகச் செய்து வைத்தோம். அது எப்படி யென்றால், எங்களை ஆளும் அயலூர்காரனுக்கு எங்களிடம் மிகப் பிரியம். அவனுக்கு எதற்கும் 'சலாமும் சரியும்' போடுவோம். ஆகையினால் எங்கள் ஊரிலுள்ள இரண்டொரு பாகங்களை 'நீங்களே ஆளுங்கள்' என்று சொல்லி விட்டான். நாங்கள் ஒப்புக்கொண்டோம். மிருகக்கட்சி 'முழுதும் கொடுத்தால் கொடு, இல்லாவிட்டால் ஒன்றும் வேண்டாமென்று பேசாமலிருந்து விட்டது. ஆகையினால் எங்கள் கட்சியார் அந்த பாகங்களை இது வரையிலும் ஆண்டுக்கொண்டு வந்தனர். மிருகக்கட்சி இடை யிடையில் கிளர்ச்சி செய்யும். அயலூர்காரன் எங்கள் உதவியை வைத்துக்கொண்டு அந்தக் கட்சியாரை அடித்து, அடக்கி ஒடுக்கி விடுவான். இம்மாதிரி அந்தக் கட்சி பலமுறை எங்கள் ஊருக்காக கஷ்டப்பட்டிருக்கிறது.

இப்படி அநேக நாட்கள் சென்றன. அநேகர் மனதிலுள்ள எண்ணங்கள் மாற ஆரம்பித்தன. மிருகக் கட்சியின் மனமும் மாற ஆரம்பித்தது. 'ஏன் இப் பறவைக் கட்சி மாத்திரம், அயலூர்காரன் தயவைப் பெற்றுக் கொண்டு சௌக்கியமாக இருக்கிறது? நாமும் ஏன் அப்படி இருக்கக் கூடாது? எவ்வளவு நாள் தான் அடிபட்டுக் கொண்டே இருப்பது? அயலானுடன் கூடி அவனைக் கெடுக்க வேண்டு' மென்று, மிருகக்கட்சிக் காரர்கள் எல்லாம் சேர்ந்து, அயலூர்காரன் கொடுத்ததை வைத்துக் கொண்டு, முதலில் ஊரில் அதிகாரம் வகித்து, செல்வாக்குப் பெற்று, பின்னர், அயலானை அடியோடு தாத்தி விடலா மென்றும், தற்சமயம் பறவைக் கட்சிக் காரர்களை ஒழித்து விட வேண்டு மென்றும் முடிவுக்கு வந்து விட்டார்கள்.

மிருகக் கட்சியின் முடிவைக் கேட்டு நாங்கள் திடுக்கிட்டோம். இனி நாம் வாலை ஆட்ட முடியாது; எல்லா அதிகாரங்களும் மிருகக் கட்சி தான் அடித்துக் கொண்டு போய் விடும் என்று தீர்மானித்து விட்டோம். 'அதான்' அயலூர் காரன், 'எப்படா' மிருகக் கட்சி தான் சொல்வதைக் கேட்கும் என்று காத்துக் கொண்டிருக்கானே?

இந் நிலையில், ஊரிலுள்ள 'பெரிய மனுஷனாகிய' வௌவால் நினைவு வந்தது. இந்த வௌவாலை எப்படியாவது எங்கள் கட்சியில் சேர்த்து, கட்சியை பலப்படுத்தலா மென்று அதை அணுகி 'எங்கள் கட்சியில் சேருங்கள்; நாங்கள் இவ்வளவு காலமாக உங்களுக்கு உதவி செய்திருக்கிறோம்' என்று கேட்டோம். வௌவால் 'பச்சைசிரிப்பு' சிரித்து, 'முடியாது' என்ற பதிலை வாழைப் பழத்தில் ஊசி ஏற்றும் விதம்போல் அளித்து, எங்களைப் போகச் சொல்லி விட்டது. எங்களுக் குண்டான வருத்தத்திற் களவில்லை. சரி, உன்னைத் தொலைத்து விடுகின்றோம்' என்று மனதிற்குள் முடிவு செய்து கொண்டு விடு திரும்பினோம்.

சிறிது நாள் கழித்து, அயலூர்காரன் கொடுத்த பாகங்களை யார் ஆளுவது என்ற விஷயமாக மறு தேர்தல் வந்தது. மிருகக் கட்சி, தன் முடிவின்படி, இத் தேர்தலில் வெற்றி பெற பலத்த ஏற்பாடு செய்தது. எங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. இந்த வௌவால் எங்களுடன் சேர்ந்திருந்தால், இம் மிருகக் கட்சியை ஒரு 'கை' பார்த்து விடுவோம். எப்பொழுது இது எங்களைக் கை விட்டு விட்டதோ, இந்தத் தேர்தலில் நம்பிக்கை

யும், ஆசையும் எங்களுக் கில்லாமல் போய் விட்டது.

ஆனால் வெளவால், இப்பொழுது ஊரில் எல்லாப் பதவியும், பட்டமும் வகித்திருப்பதால், அவைகளை விட்டு விடக்கூடாது; எப்படியாவது தேர்தலில் தனிப்பட்ட முறையில் நின்று ஜெயித்து, ஊரில் தான் 'பெரிய ஆள்' என்ற பெயரை நிலைநாட்ட வேண்டுமென்று தீர்மானம் செய்து கொண்டது. இவ் வெண்ணத்தைப் பூர்த்திசெய்ய, தன்னைப்போலுள்ள வெளவால்களைச் சேர்த்து, ஒரு 'வெளவால் கட்சி' உண்டாக்கியது.

மிருகக் கட்சிக்கும் வெளவால் கட்சிக்கும் தேர்தல் கடுமையாக நடந்தது. எங்கள் கட்சி சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இறுதியில் வெளவால் கட்சி முறியடிக்கப்பட்டது. நமது வெளவால் இதுகாறும் அநுபவித்து வந்த பட்டம் பதவி யெல்லாம் மிருகக் கட்சிக்காரர்களுக்குப் போயின. வெளவால் சென்ற இடமே தெரியவில்லை. வெளவால் தோற்றதைப்பற்றி ஊரில் எல்லாம் ஒரே பேச்சு. ஒருவராவது 'ஐயோ! பாவம்!' என்று வருத்தப் படுவதாகத் தெரியவில்லை. அந்த வெளவாலுக்கு 'வேணும்' என்று கூறுகிறார்களே யொழிய, வருத்தப்படுவார் யாருமில்லை. 'எல்லோருடைய தயவு வேண்டும், ஆகையினால் எல்லோரையும் திருப்திசெய்; எல்லோரும் கெட்டவர்கள், ஆகையினால் ஒருவருடனும் பேசாதே; எல்லோரும் முட்டாள்கள், ஆகையினால் எல்லோரையும் ஏமாற்று'' என்று நினைக்கக்கூடிய ஒரு பிராணிக்கு வேறு என்ன கிடைக்கும்?

வாசகர்களே! இப்பேர்ப்பட்ட இவ் வரசியல் வெளவால் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? தெரியுமானால் அதன் பெயரைச் சொல்லுங்கள் பார்க்கலாம்!

மீர்ஜார்புரம் ராஜா பகற் கனவு



கிருஷ்ணா ஜில்லாவிலே ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரைக் கேட்டவுடனே, ஜனங்கள் குதூகலத்தால் கூத்தாடுகின்றனர் என மீர்ஜாபுரம் ராஜா ஒரு வியாசத்திலே குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் உண்மை நிலையென்ன? இப் படத்தைப் பார்த்தால் தெரியும்.



ஆசாபந்தம்

——:(0):——

(எஸ். கே. கணேசன்.)

முன்பனிக்குப் பின்பனிக்காலமும் முற்றி இளவேனில் வந்தடைந்தது. மரங்களெல்லாம் தத்தம் முதிர்ந்து பழுத்த இலைகளை யுதிர்த்து கண்ணுக்கு ரம்மியமான காட்சியை யளித்தன. பட்சிகளும் காச்சு மூச் சென்று கத்தித் தம் ஆனந்தத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்தன. இரவிலோ கோகிலங்கள் இனிய குரலெடுத்து இன்னிசை பாடும்; பகலெல்லாம் சுட்டுப் பொசுக்கும் வெய்யல், இரவில் தண்கதிரோன் வரவால் குளிர்ந்து விடும். தென்றற் காற்றானது மெல்லென வீசி இளங் காதலர்களைத் தட்டி யெழுப்பி விடும். சரசசல்லாபத்தோடு, மகிழ்ச்சியுடன், ஊடி விளையாடுவர் மணந்த மங்கையர். பருவம் வந்தும் மணமாகாத பெண்கள், மதியின் உஷ்ணம்பொறுக்காது, மனநைவர். மணந்தும், கோரிய காதலனை யடையாததனால் மனமின்றி வாழ்ந்து வெம்பி ஏங்குபவரும் உண்டு.

இக் கடைசி வர்க்கத்தைச் சேர்ந்தவள் தான் பிரேமா. அவள் விரும்பாத ஒருவருக்கு வாழ்க்கைப் படுத்தினர் அவள் பெற்றோர். பெற்றோர் சம்மதப்படும்போது பிள்ளைகள் சம்மதிக்காதது யாருடைய தவறு? ஐயோ!

பிரேமா உறங்கிக் கொண்டிருந்தாள். சந்திரனும் அருகே உறங்கினான். உண்மையில் இருவரும் பொய்த்தூக்கமே பூண்டிருந்தனர்.

பிரேமாவின் உள்ளத்தில், அழகிய வாசவன்றான் கம்பீரத்தோடு அமர்ந்திருந்தான். சந்திரன் அவளை மணந்து கொண்ட போதிலும், அவள் இருதய வீட்டில் புக முடியவில்லை.

சந்திரனை மணந்தது முதல் அவளுடைய முகம் பொலி விழந்தது. வாசவன் பாபுருஷனாக ஆன போதிலும் அவனை மனமாளிகையி லிருந்து விலக்க முடியவில்லை. ஆராத ஆசை அவளைப் பந்தப்படுத்தி வாசவனிட மிருந்து பிரிக்க வியலாது போயிற்று. சந்திரனும் அழகனே. அவனுடைய குர்ளிந்த வசனங்களும், மிருதுவான தன்மையுங்கூட அவளுடைய மனதை யீர்க்கவில்லை. அவளுக்காக சந்திரன் எவ்வளவோ செய்தான். அவளோடு மன்றாடினான். வாதாடினான், கெஞ்சினான், காலில் ஈழ்ந்திறைஞ்சினான். ஆயினும், அவளன்புக்கு மாத்திரம் வாசவனே இலக்கா யிருந்தான்.

சந்திரன் உத்தமன். அவளாகத் தன்னை விரும்பும் வரை பொறுப்பதென்று சபதஞ் செய்திருந்தான். அதனால் ஒரே படுக்கையி லிருவரும் உறங்கிய போதிலும் அண்ணன் தங்கைபோல மாசற்றிருந்தனர்.

நிற்க, ஜன்னலூடே கள்ளத்தனமாய் நுழைந்து வரும் தென்றல் அவள் மேனியிற் பட்டபோது சுடு நெருப்பை யொத்தது. துக்கம் நெஞ்சை யடைத்தது. திரும்பிப் பார்த்தாள். சந்திரன்

ஆழ்ந்த நித்திரையில் காணப்பட்டான். மெதுவாக எழுந்து, ஓசைபடாது கதவைத் திறந்து கொண்டு வெளியே சென்றாள். கொல்லைப்புறத்தில் நின்று சற்று நேரம் அப் பங்களாவை நோக்கினாள். அதில் தனது அமங்கள வாழ்வை எண்ணினாள். பிறகு, நடந்தாள். தோட்டத்திற்கு வெளியே சென்றது, நீலக்கடல் சந்திரனொளியில் பளிச்சென்று வீசிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துக்கொண்டே கரை வழியே தெற்கே சென்றாள்.

முன்னரே கூறியபடி பொய்யுறக்கங் கொண்டிருந்த சந்திரனும் அவளைப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தான். ஆனால், ஏன் அவள் அவ்விரவில் வெளிக் கிளம்பிச் செல்கிறாளென்பதை அறியக் கூடவில்லை.

கடைசியாக பிரேமா நின்றாள். அது, காதலின் வேகத்தால், 500 மைல்கள் வரை சளைக்காது ஓடிவந்து சமுத்திர ராஜனை முத்தமிட்டு நிற்கும் (காவிரி சங்கம மாகும்) இடம்.

ஆற்றில் பிரவாகம் இல்லாவிடினும் சமுத்திர ஜலமானது காற்றினா லுந்தப் பட்டு வெகுதூரம் உள்ளே செல்வதும் வடிவதுமா யிருக்கும். அதனால் சங்கம இடத்தில் எப்போதும் நீரோட்டங்களும் நீர்ச்சுழல்களும் பார்க்கப் பயங்கரமா யிருக்கும். அதில் அகப்பட்டவர்கள் பிழைப்ப தரிது. அதைத்தான் தேடி வந்தாள் பிரேமா!

சிறிதுநேரம் அசைவற்று நிமிர்ந்து நின்று கடலை நோக்கினாள். கைகூப்பித் தொழுதாள். அவளை யறியாமலேயே சில வார்த்தைகள் வெளி வந்தன.

'ஹே! பராசக்தி! ஜகன்மாதா! என் மனம் அளவு கடந்த கஷ்டத்தால் அலக்கழிக்கப்பட்டு விட்டது. நான் விரும்பிய ஒருவரை அடைய முடியவில்லை அவரோ நானில்லாது போனதால் பிராணத் தியாகம் செய்து கொள்வதாக உறுதி கொண்டுவிட்டார். என் செய்வேன். தாலி கட்டிய கணவனும் கஷ்டப்பட்டுக்கொண்டு, முன்னர் கோரிய காதலனும் கஷ்டப்பட்டு, எனக்கும் என்னாலும் துன்பத்தையே கொண்டு வாழ்வதைவிட நானே உலக பாசத்தை நீக்கி விடலாமென்று தோன்றுகிறது. பிறகு சந்திரனாவது வேறு மணம் செய்து கொண்டு சுகமா யிருப்பா ரல்லவா? ஆம், தாயே! என்னை ஏற்றுக்கொள், மனச் சாந்தியைக் கொடு.....................'

துள்ளிப்பாயும் கன்றுபோல் பாய்ந்தாள். அப் பயங்கரச் சுழல்கள் அவளை யேற்றுக்கொண்டன!

சந்திரன் ஒரு நிமிஷம் திகைத்து நின்றான். அவன் சுத்தவீரன் ஆகையால் அவனும் பாய்ந்தான். சுழல்கள் அவனைச் சரியாகத் தண்டித்து விட்டன.

இரண்டு மாதங்கள் பறந்தோடின. இதற்குள், சந்திரன் விவாகரத்து செய்து கொண்டான். வாசவனும், பிரேமாவும் மணம் செய்து கொண்டனர். அவர்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவில்லை. அதைக் கேட்டு நீங்களும் சந்தோஷப் படுகிறீர்க ளல்லவா?



போதனாமுறை பாடசாலையில் தமிழ்ப் பண்டிதர் வகுப்பு.

நூற்றுக்கு நூறு காதல் கதை

(எம். சுந்தரராமன்.)

இந்தக் கட்டுரை சம்பந்தமாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதென்றும், சட்டப்படி கட்டுப் படுவதென்றும் ஒப்புக் கொள்ளுகிறேன்.

ஒப்பம்:—

மாதுஸ்ரீ ப்ராணநாயகி அம்மாளும் ஆச்சர்யப் படத்தக்க விஷயமொன்று நடந்தது. அம்மாளும் என்கிற பதத்திலுள்ள உம்மையின் கருத்தை நேயர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். ப்ராணநாயகி அம்மாளிடம் போய் "அம்மாமி திருச்சினாப்பள்ளியிலே சேஷாயின்னு, ஒரு எஞ்சினீர் இருந்தார். அவர் ஏரோப்ளேனில் ஆகாயத்தில் பறக்கும் போதே குட்டிக்கர்ணம் போடுவார்" என்று சொல்லுகிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் எதிர்பார்ப்பது போல் அந்த அம்மாள் மூக்கில் விரலை வைத்துக் கொண்டு "ஆ அப்படியா?" என்று சொல்லாமல் "த்ஸ-ப" என்று ஒரு சப்பு கொட்டி விட்டு "ஏன் நேற்றுக் கூடத் தான் எங்காத்து மடா வெந்நீர்த் தவலையை வைச்சு நான் ஒண்டிக்காரி நாலு கல நெல்லைப் புழுக்கிக் கொட்டினேன்" என்று சொல்லி புருவங்களை ஒரு நெறி நெறித்துக் கொண்டு போய் விடுவாள். அத்தகைய ப்ராணநாயகி அம்மாளை ஆனந்த மெய்தச் செய்த சமாசாரம் என்னவென்றால், அந்தம்மாளுடைய செல்வ குமாரி நீலாம்பாள் என்றுமில்லாமல் இரண்டு நாட்களாய் மேலக் குளத்திற்குப் போய் ஜலம் கொண்டு வந்து விட்டாள். அத்தோடில்லாமல் அன்று "அம்மா தினம் நானே ஜலம் கொண்டு வருகிறேன்" என்றும் சொல்லி விட்டாள். அன்று சாயந்திரம் கணவன் வீட்டிற்கு வந்ததும் ப்ராணநாயகி இதைச் சொல்லிச் சொல்லி பூரித்துப் போனாள்.

* * *

கோபால் சர்மா பெங்களூரில் ஒரு பெரிய நெசவு சாலையில் மானேஜரா யிருந்தார். நான்கு அல்லது ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை தான் சொந்தக் கிராமத்திற்கு வந்து இரண்டு அல்லது மூன்று மாதங்கள் தங்கி விட்டுப் போவார். இப்பொழுது கோபால் சர்மா உசிலம்பட்டிக்கு வந்து ஒன்றரை மாதமாகிறது. ஆகவே மைந்தன் கிருஷ்ணமூர்த்தி 6 வருஷங்களுக்கு முன் பார்த்த தன் சொந்த ஊராகிய உசிலம்பட்டியை இப்பொழுது தான் காண சந்தர்ப்பம் வாய்த்தது. ஆயினும் அவனுக்குக் கிராமாந்திர வாழ்க்கை ரஸிக்க வில்லையாதலால் வந்து ஒரு மாத காலம் வரையில் வீட்டை விட்டு வெளியே கிளம்ப வில்லை. திடீரென்று ஒரு வார காலமாக கிருஷ்ணமூர்த்தி மாலை மணி மூன்றுக்கு மேல் வீட்டில் தங்குவதே அரிதாயிற்று. கோபால் சர்மா உலகானுபவமுள்ளவர். கிருஷ்ணமூர்த்தி அந்த ஒரு வாரத்தில் நடந்து கொண்ட மாதிரியிலிருந்து பையன் ஏதோ 'நரி வேட்டை'யி

கிறங்கி யிருக்கிருன் என்று நிச்சயித்தார். விஷயம் தெரிந்தவராதலால் அதைக் கண்டு கொண்டதாகவே காட்டிக் கொள்ள வில்லை.

* * *

உசிலம்பட்டி மேலக் குளத்தங்கரை. மாலை மணி நான்கு இருக்கலாம். மனோஹாமான காற்று வீசிக் குளத்தங்கரையிலிருந்த பட்டுப்போன ஆலமரத்தின் காய்ந்த இலைகளை உதிர்த்துக் கொண்டிருந்தது. கரைகளில் கழுதைகளும், எருமை மாடுகளும் மேய்ந்து கொண்டிருந்தன. குளத்தின் தென் துறையில் வண்ணான்களும் வண்ணாத்திகளும் துணி வெளுத்துக் கொண்டிருந்தனர். கீழத் துறையின் ஒரு ஓரமாக மாடு மேய்க்கும் சிறுவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

குளத்தங்கரையில் கையில் ஒரு புஸ்தகத்தைப் பிடித்து படிக்கும் பாவனையில் உட்கார்ந்திருந்த கிருஷ்ண மூர்த்திக்கு இவைகளெல்லாம் ரஸிக்க வில்லை. அவன் கண்கள் நீலாவின் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தன.

நீலாம்பாளும் ஒரு சின்னக் குடத்தை இடுப்பில் ஏந்திக் கொண்டு குளத்திற்கு வந்தாள். நீலா குளத்தி லிறங்கியதும் கிருஷ்ணமூர்த்தியின் முகத்தில் புன்னகை ததும்பியது. நீலாவையே கூர்ந்து நோக்கினன் நீலாவும் உற்று நோக்கினள். (இவனையல்ல; எதிர்க்கரையில் உறிமட்டை யொன்றை மென்று கொண்டிருந்த கழுதையை. கழுதை என்ன நினைத்ததோ உறிமட்டையை கீழே போட்டு விட்டு சிறிது தூரத்தில் மேய்ந்து கொண்டிருந்த தனது வாழ்க்கைத் துணைவியைக் கடைக் கண்ணுல் நோக்கி ரீங்காரம் செய்ய வாரம்பித்தது.) நீலா குடத்தைத் தூக்கி இடுப்பில் வைத்துக்கொண்டு வீட்டிற்கு நடந்தாள்.

மறுநாட் பிற்பகல் மூன்று மணி சுமாருக்கு கிருஷ்ணமூர்த்தி வழக்கம் போல் உலாவக் கிளம்பினன். மேலத் தெருவில் போய்க் கொண்டிருந்த போது "குட்டீஸினிங் கிருஷ்ணன்" என்ற குரல் கேட்கவே திரும்பிப் பார்த்தான். தன் 'காலேஜ் மேட்' சுந்திரேசன் நிற்பதைக் கண்டான்.

"எங்கடா வந்தே கிச்சு !" என்ருன் சுண்டு.

"நீ எங்கடா இங்கே வந்தே" என்ருன் கிருஷ்ணமூர்த்தி.

கிச்சா வினவ சுண்டு விடையளிக்க, சுண்டு கேட்க கிச்சு பதில் சொல்ல நண்பர்கள் இருவரும் ஓயாமல் பேசினர்கள்.

சுண்டுவுக்கு உசிலம் பட்டியில் தூர உறவினர் ஒருவர் இருப்பதாகவும், அவருடைய பெண்ணை சுண்டுவுக்குக் கலியாணம் பண்ணிக் கொடுத்து விட்டுத் தான் கீழே உட்காருவேன் என்று அவர் ஒற்றைக்காலால் நிற்பதாகவும், பாவம் அந்த மனுஷனை சற்று உட்காரச் சொல்லுவோமென்று, சுண்டு அந்தப் பெண்ணை அடுத்த வெள்ளிக்கிழமை கலியாணம் செய்து கொள்ளப் போவதாகவும் அறிந்து கொண்டான் கிச்சா.

சுண்டு கிச்சாவிடம் தெரிந்து கொண்டதெல்லாம் இதுதான்.

தன் தகப்பனுரோடு சொந்த ஊருக்கு வந்தான் கிச்சா. ஆனல் காலம் மாறி விட்டது; அவனும் மாறி விட்டான். அந்தக் கிராமம் அப்போது கொஞ்சங் கூடப் பிடிக்கவில்லை. நாக்கைப் பிடுங்கிக் கொள்ளலாமா வென்று கூடத் தோன்றியது. இந்த நெருக்கடியான சமயத்தில் வந்து தன்னைக் காப்பாற்றிய சுண்டுவுக்கு மிகவும் கடமைப் பட்டிருக்கிருன் கிச்சா.

வியாழக்கிழமை மாலை சுப்ரமணிய அய்யர் வீட்டில் நிச்சயதார்த்தம். மணப் பந்தலில் கிச்சா, கிச்சாவின் தகப்பனர், சுண்டுவின் தகப்பனர் இன்னும் கிராமத்தார் ஆண் பெண் இருபாலரும் அமர்ந்திருந்தனர். மணமகன் சுண்டு தன்னை சுற்றி யிருப்பவர்களை ஒரு பார்வை பார்ப்பதும், கழுத்தி லிருந்த ரோஜா மாலையை சற்று இழுத்துவிட்டுக் கொள்வதுமாயிருந்தான். மணப்பெண் நீலாவும் நன்கு

அலங்கரித்துக் கொண்டு வந்து, சுண்டு பக்கத்தில் அமர்ந்தாள்.

பெங்களூர் "ஸிட்டி ஸினிமா"வில் சார்லி சாப்ளினின் "ஸிட்டி லைட்ஸ்" ஸினிமாக் காக்ஷியை மானஸீகமாகப் பார்த்துக் கொண்டிருந்த கிச்சா சட்டென்று கண்களைக் கசக்கிக் கொண்டு மணப் பெண்ணைப் பார்த்தான். அவ்வளவுதான். அவனுக்குத் தலை சுழன்றது. கூடம் சுற்றியது. கூடத்திலிருந்த கூட்டமெல்லாம் சுற்றியது. தெருவில் தம்பி கிட்டுப்பயல் கையில் பிடித்துக் கொண்டிருந்த காற்றாடி கூட சுழன்றது.

* * *

இதிலென்னவோ கதை தானிருக்கிறது; காதலைக் காணோமே என்கிறீர்களல்லவா? உங்களை யொத்த சந்தேகப் பிராணிகளை முன்னிட்டுத்தான் ஸார் கட்டுரை ஆரம்பத்திலேயே கூபன் பிரசுரித்திருக்கிறேன். அதில் கையெழுத்துப் போட்டு விட்டுத்தான் இந்தக் கட்டுரையை வாசிக்க வேண்டுமென்று முதலிலேயே சொல்ல மறந்ததற்காக மன்னிக்கவும்.

நூதன தமிழ் நாவல்கள்.

வடுவூர்-கே. துரைசாமி ஐயங்கார், B. A. எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
திகம்பர சாமியார்								
பால்ய லீலை	5	0	துரைக்கண்ணம்மாள்	2	4	மிஸ்டர் பூச்சாண்டி		
மிஸிஸ் லைலா மோகினி	3	0	லக்ஷ்மீகாந்தம்	2	0	எம்மே!	1	2
மன்மதபுரியின் மூடு			திரிபுரசுந்தரி	2	0	சோமசுந்தரம்	1	2
மந்திரம்	2	12	இராஜேந்திர மோகனா	2	0	டாக்டர் சோணாசலம்	1	2
கனகாம்புஜம்	2	12	வசந்தகோகிலம்	1	4	பச்சைக்காளி	1	2
தில்லைநாயகி	2	4	முத்துலக்ஷ்மி	1	4	சமயசஞ்சீவி	1	2
ஸதானந்த போதக			நீலலோசனி	1	2	சொக்கன் செட்டி	1	2
சாமியார்	2	4	கலியாண சுந்தரம்	1	2	பூஞ்சோலையம்மாள்	1	2
பன்னியூர் படாடோப			நங்கை மடவன்னம்	1	2	சிவராமகிருஷ்ணன்	1	2
சர்மா	2	4	சிங்கார சூர்யோதயம்	1	2	மாயசுந்தரி	0	12

செய்யூர்-எஸ். சாரநாயகி அம்மாள் எழுதியவை.

எஸ். எஸ். அருணகிரிநாதர் எழுதியவை.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
சிவபாக்யம்	1	8	நித்யகல்யாணி	0	12	கனகமணி	2	4
அபராஞ்சி	0	12	சண்முகவடிவு	0	5	பத்மாட்சி	2	0
ஞானக்கொழுந்து	0	12	மன்மத விஜயம்	0	4	வசந்தா	1	8
... ச்குமார்	0	12				வீரகேசரி	1	8

மாமணி ரூ. 2 0 0 | சுந்தரி மனோகரன் ரூ. 1 4 0

கருணாநிதி டிபோ, 1/6, வெங்கடேச மேஸ்திரி தெரு, மதராஸ்.

வீராசாமியின் வீரம்

:0:

(ஆரியூர்-வ. பதுமநாப பிள்ளை.)

கொங்கு நாட்டிலுள்ள வேப்பிலைப்பட்டி ஒரு சிறு கிராமம்; சுமார் முந்நூறு வீடுகள் கொண்டது. நாட்டாண்மைக்காரர்—திம்மப்பக் கவுண்டர், அவ்வூருக்குள் சர்வாதிகாரம் செலுத்தி வந்தார். அவர் நா அசைந்தால் நாடு — இல்லை—வேப்பிலைப்பட்டி முழுதும் அசையும்; அதாவது, அவ்வூரார் அவரால் தாம் விரும்பியவா றெல்லாம் ஆட்டி வைக்கப்பட்டு வந்தனர். அவ்வூருக்குள், அவரது கட்டளைகளை எதிர்த்து நடக்கத் துணிவோர் எவரும் இல்லை. அவ்வாறு அவ்வூருக்குள் யதேச்சாதிகாரம் செலுத்தி வந்த திம்மப்பக் கவுண்டரே, அவ்வூருக்கு மணியகாரராகவும் விளங்கி வந்தார். 'கிராம முனிசீப் பதவி'யாகிய மகுடத்தையும் 'நாட்டாண்மைப் பதவி'யாகிய செங்கோலையும் ஒருங்கே பெற்ற திம்மப்பக் கவுண்டருக்கு, ஒரே ஒரு அருமைப் புதல்வி இருந்தாள். கவுண்டர், தமது ஒரே மகளை எவ்வளவு செல்வமாக வளர்த்து வந்திருப்பா ரென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? சிறுவயதில் தனது தந்தையின் மடியில் அமர்ந்துகொண்டு அவர் செலுத்தி வந்த அதிகாரங்களை யெல்லாம் அடிக்கடி கவனித்துக்கொண்டு வந்த அந்த சிறுமியின் மனத்தில், தானும் தன் தந்தையைப்போலவே மற்றெல்லோரையும் அடக்கி யாளவேண்டு மென்னும் ஆவல் மேன்மேலும் பெருகிக்கொண்டு வந்தது. 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்'—எனும் பழமொழி பொய்ப்படுமோ? 'வீராயி' எனும் பெயர் பூண்ட அந்த சிறுமி, இளம் பருவத்தி லிருந்தே 'இமிடேஷன் அல்லிராணி'யாகக் காலங் கழிக்கலானாள்.

வீராயி, அடுப்பங்கரையில் தனது சாதாரணக் குரலில் பேசும் பேச்சின் ஒலி தெருவில் நடந்து செல்வோரின் செவிகளிலும் சென்று கணீலென்று விழுமானால், அவள் கோபம் மிகுந்து உரத்திப் பேசும் பேச்சின் ஒலி எப்படிப்பட்டதாயிருக்கு மென்பதை வர்ணிக்கவும் முடியுமோ? திம்மப்பக் கவுண்டர் வேப்பிலைப்பட்டிக்குள் சர்வாதிகாரம் செலுத்தி வந்தாரென்றால், அவரது அருமைத் திருமகளாகிய வீராயி அம்மாள் தனது வீட்டுக்குள் சர்வாதிகாரம் செலுத்தி வந்தாள். அவ்வீட்டிலுள்ள மற்றவர்கள் அவளது வாய்க்குப் பயந்து அவளிடம் நெருங்கிப் பேசத் துணியாமல் விலகிச் சென்றாலும், அவள் மற்றவர்களின் செயல்களில் ஏதேனும் குற்றங் குறைகளைக் கற்பித்து அடிக்கடி உச்சக்குரலில் வசைமாரி பொழிந்துகொண்டிருப்பாள். சிறு வயதில் அவளது நடத்தையை அவளது பெற்றோர்கள் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை; ஆயினும், அவளது வயது வளர வளர அவ் வயதுடன் எவருக்கும் அடங்காத சண்டித்தன்மையும் வளர்ந்து கொண்டே வந்தது; திம்மப்பக் கவுண்டருக்குக்கூட பிடிக்கவில்லை. அவரும் அவரது மனைவியும் தங்களது அருமை மகளைச் சீர்திருத்த எவ்வளவோ முயன்றும் சிறிதும் பயன்படாமற் போய்விட்டது. தானாகக் கனியாத கனியைத் தடி கொண்டடித்துக் கனிவிக்க முடியுமோ?

இந்த பாரத நாட்டிலே—அதிலும் தென்தமிழ் நாட்டிலே — பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒருத்தி, என்றும் கன்னியாகவே தனித்திருந்து காலங் கழிப்பது அபூர்வம். பெண்ணாகப் பிறந்துவிட்ட ஒவ்வொருத்தியும், என்றேனும் ஒரு ஆடவனுக்கு வாழ்க்கைப்பட்டே தீரவேண்டும். ருதுவான பின்னும் மணமாகாத இளம் பெண்ணை வீட்டில் வளர்த்து வந்தால், அதைக் குறித்து ஊர் முழுதும் பரவிப் பெருகும் வம்புப் பேச்சுகள் பலவகைப் பட்டனவா யிருக்கும். வீராயி, தனது சர்வாதிகாரத்துவத்தைப் பயன்படுத்தித் தனக்குப் பிடிக்காத எதையும் எளிதில் தடுத்து நிறுத்தி விடக்கூடிய மகத்தான சக்தி உடையவள்தான்; எனினும், மிக மிக வேகமாகச் சுழன்றுகொண்டே யிருக்கும் காலச் சக்கரத்தைத் தடுத்து விடக் கூடிய சக்தி, அவளுக்கு உண்டோ? தன் மனம் போனவாறெல்லாம்—தான் விரும்பிய இடங்களி லெல்லாம்—பரிபூர்ண சுதந்தரத்துடன் திரிந்து கொண்டிருக்கும் வீராயிக்குங்கூட, வீட்டுச் சிறையை விட்டு வெளியிற் செல்ல முடியாத காலமும் நேர்ந்து விட்டது. தான் ருதுவாய் விட்டது குறித்து அவள் அடைந்த துக்கம், வர்ணிக்கக் கூடியதல்ல.

வீராயி ருதுவான வன்று முதலே, அவளது பெற்றோர்களைக் கொடிய கவலைப்பேய் பிடித்துக்கொண்டு விட்டது. அவளை மணந்துகொள்ள மனந் துணிந்து முன் வரக்கூடிய மாப்பிள்ளையைத் தேடுவது எப்படி யென்ற கவலையே, அவளது பெற்றோருக்குப் பெருங்கவலையாய் விட்டது. அவளது நிகரற்ற சண்டித்தன்மை அவ்வூரில் மட்டுமன்றி சுற்றுப் புறங்களிலும் நன்கு பரவி விட்டிருந்ததால், ஐந்தாறு வருடங்கள் கடந்த பின்னும் அவளை மணந்துகொள்ள ஒருவரும் திம்மப்பக் கவுண்டரின் வீட்டுக்கு வந்தபாடில்லை. தப்பித் தவறி வந்த சிற்சிலர் கூட, அவளைப்பற்றிய விவரங்களை ஊரில் விசாரித்தறிந்து கொண்ட பின்பு, வந்தபடியே திரும்பிப் போய்விட்டனர். மணமாகாமல் வீட்டில் வசித்து வந்த வீராயியைக் குறித்து, அவ்வூர்க் குளத்திலும் காலை மாலை வேளைகளில் கூடும் 'வம்பர் மகா சபைக'ளிலும் பலவகைப்பட்ட பேச்சுகள் பெருகலாயின.

கொஞ்ச காலம் சென்ற பின்பு, ஒரு நாள் வேப்பிலைப்பட்டிக்கு வந்த வழிப்போக்கன் ஒருவன், இரவில் அவ்வூரிலுள்ள சத்திரத்தில் தங்கலானான்; சத்திரத்துத் திண்ணையில் அமர்ந்து கொண்டிருந்த அவ்வூர் வாசிகளுள் இருவர் வீராயியைக் குறித்து பேசிக்கொண்டிருந்தவற்றை, 'வீராசாமிக் கவுண்டன்' எனும் பெயருடைய அந்த வழிப்போக்கன் கேட்க நேர்ந்தது. அவ் விஷயங்களையெல்லாம் கேட்டறிந்து கொண்ட வீராசாமி, தன் மனத்திற்குள் ஒரு உறுதியான திட்டத்தைத் தயாரித்துக்கொண்டு விட்டான். மறுநாள் பொழுது விடிந்ததும் திம்மப்பக் கவுண்டரின் வீட்டையடைந்த வீராசாமி, தானும் அவர்களது குலத்தைச் சேர்ந்தவனே என்பதையும் கௌரவமாகக் குடும்ப—வாழ்க்கை நடத்தப் போதிய சொத்து தனக்கு இருப்பதாகவும் அவரது மகளை மணந்துகொள்ளத்தான் பெரிதும் விரும்புவதாகவும் திம்மப்பக் கவுண்டரிடம் தெரிவித்துக் கொண்டான். அதைக்கேட்ட திம்மப்பரும் மிக மிக மனம் மகிழ்ந்தவராய், ஒரு சுப—முகூர்த்த நன்னாளில் தமது அருமைத் திருமகள் வீராயியை வீராசாமிக்கு மணம் செய்து கொடுத்து, சீதனப்பொருள்களாக பல பரிசுகளும் அளித்து, பெண்ணை மாப்பிள்ளையுடன் கூட்டி யனுப்பலானார். திம்மப்பக் கவுண்டர் தனது மாப்பிள்ளைக்குப் பரிசுகளாகக் கொடுத்தவற்றில், பத்து ஆடுகளும் ஒரு டஜன் கோழிகளுங்கூட சேர்ந்திருந்தன. தனது சொந்த வீட்டுக்குள் தனக்குங்கூட அடங்காமல் தனக்குப் போட்டியாக எல்லா விஷயங்களிலும் சர்வாதிகாரம் செலுத்தி வந்த வீராயி தன் வீட்டை விட்டுச் சென்றதில் திம்மப்பக் கவுண்டருக்கு ஒரு பெருங் கவலை நீங்கியதுபோ லிருந்தாலும், அவளை மணந்து கொண்ட வீராசாமி அவளிடம் என்ன பாடு படுவானோ என்பதை எண்ணுந்

தோறும் அவருக்குத் தமது புதிய மாப்பிள்ளையிடம் அநுதாபம் ஏற்படாமலில்லை.

வீராயி, தனது திருமணத்திற்கு முன்னும் பின்னும் காலைந்து நாட்கள் தனது நாவை அடக்கிக் கொண்டிருக்கப் பட்ட பாட்டையும் மௌனமாக அநுபவித்த மன-வேதனையையும் வர்ணிப்பது சாத்தியமில்லை. அத்தகைய வேதனையைச் சில தினங்கள் சகித்துக் கொண்டிருக்கக்கூடிய அரிய சக்தியை, சாக்ஷாத் பூமிதேவிதான் அவளுக்கு அளித்தருளினாள் போலும்!

வீராயி தனது மாமியார் வீட்டை அடைந்த பின், தனது நாவின் அபார—சக்தியை வெளியிடாமல் கட்டுப்படுத்தி

இரண்டு தினங்களை எப்படியோ கடத்தி விட்டாள். எனினும், அவ் விருதினங்களிலும் அவளது நாக்கு தனது சுய—ரூபத்தைக் காட்டாமல் அடங்கியிருந்தாலும்; அவளது மனம் சும்மா இல்லை. தனது கணவனையும் மற்றவர்களையும் எப்படியெப்படி அடக்கி யாளலா மென்பதைக் குறித்து அவளது மனம் தீவிரமாக ஆலோசித்துக்கொண்டுதா னிருந்தது.

மூன்றாவது நாள் காலையிலே, வீராயி கூடத்தில் கால்களை நீட்டி உட்கார்ந்து கொண்டு தலை வாரிக் கொண்டிருந்தாள். அப்போது, வீராசாமி ஒரு கோழியையும் ஒரு ஆட்டையும் கொண்டு வந்து, இரண்டையும் ஒவ்வொரு தூணில் கட்டிவிட்டு, அவற்றை நோக்கி ஆள்காட்டி விரலை நீட்டிக் காட்டி, "பத்திரம்! வாயைத் திறக்கப் போறீங்க! நான் சொன்னதை மீறி வாயைத் திறந்தீங்களோ, அவ்வளவு தான்! உங்க உயிரைப் போக்கிடுவேன்!"-என்று எச்சரித்துவிட்டு வெளியிற் சென்றான். சிறிது நேரஞ் சென்ற பின், வீராசாமி தனது வீட்டுக்குத் திரும்பினான். அப்பொழுதுங்கூட வீட்டு வேலைகளைக் கவனிக்காமல் கூடத்தில் கால்களை நீட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டிருந்த வீராயி, மாவால் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். வீராசாமியின் எச்சரிக்கையைப் பொருட்படுத்தாத ஆடு, அவனைக் கண்டவுடன் 'அம்மே!' என்று கத்தியது. அவ்வளவு தான்! அதே நிமிஷத்தில், வீராசாமி வீரபத்திரனைப்போல் மாறி, தனது கையில் வைத்திருந்த கொடுவாளால் ஆட்டின் கழுத்தில் ஓங்கி ஒரு போடு போட்டான்! மறு கணத்திலே, அந்த எளிய ஆட்டின் தலை உடலிலிருந்து பிரிந்து தரையில் விழுந்து துடி துடிக்கலாயிற்று. அதைக் கண்ட பின்பேனும், அந்தக் கோழி சும்மா இருக்கக் கூடாதா! அக் கோழியும் 'கொக்காக்கோ'—என்று ஒரு முறை கூவியது. அதே நிமிஷத்தில், வீராசாமியின் கொடுவாள் கோழியின் கழுத்திலும் பாய்ந்தது; மறுநிமிஷத்தில், அதன் தலையும் தரையில் விழுந்து துடி துடித்தது. "நான் சொல்லிவிட்டுப் போறதாவது! நான் சொன்னதைக் கொஞ்சங்கூட சட்டை பண்ணும நீங்க கத்தறதாவது! என்னை என்னன்னு

நினைச்சிக்கிட்டீங்க?"—என்று சினம் மிகுந்த சிங்கத்தைப்போல் கர்ஜித்து நின்றான் வீராசாமி. அந்த கோரக்காட்சியைக் கண்ணெதிரில் கண்ட வீராயி, உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரையில் பெரிதும் நடு நடுங்கி நின்றாள். அந்த நிமிஷத்திலேயே அவளது மனத்திமிரும் வாய்க்கொழுப்பும் மாயமாக மறைந்துபோய் விட்டன! பிறந்த வீட்டில் எவருக்கும் அடங்காமல் கர்த்தப-ஸ்வரத்தில் கத்திக் கொண்டு யதேச்சாதிகாரம் செலுத்தி வந்த சண்டி—வீராயி, இப்பொழுது தனது கணவன் வீட்டில் தனது குழந்தைகளுடனும் கணவனுடனும் குயிலினும் இனிய மெல்லிய குரலில் கொஞ்சிக் குலவிக் கொண்டிருக்கும் பரமசாது வீராயியாக மாறி விட்டதாகக் கேள்வி. இன்றைய தமிழ்நாட்டிலே, வீராசாமியைப் போல் ஒருநாள் கூடி சண்டை போடாமலும்—சத்தியாக்கிரகம் செய்யாமலும்—சண்டி மனைவியைச் சாது மனைவியாக மாற்றி விடக்கூடிய வீரசிங்கங்கள், எத்தனைபேர் முன் வரக்கூடும்!



தாயார்:—(தன் மகனைப் பார்த்துக் கோபமாக) "அடே! மூக்கா, அங்கே வந்தேன்னு துடப்பக்கட்டை முறிந்துவிடும். தெரியுமா?"

மூக்கன்;—"ஐயோ! பாவம். துடப்பக்கட்டைக்கும், உனக்கும் எம்மா அவ்வள விரோதம்? வேண்டாம்-வேண்டாம். இங்கே வாராதே!"

தமிழ் நாடு

—:(o):—

‘கிரதி’ பாடியது.

நந்தமிழ் நாடெனும் போதினிலே—துன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
மைந்தர்கள் நாடென்ற போதினிலே—ஒரு
சக்தியழியுது மூச்சி னிலே. 1.

வேதம் குறைந்த தமிழ்நாடு—உயர்
வீரம் மறைந்த தமிழ்நாடு—கெட்ட
காதல் புரியும் அரக்கிகளால் நந்தம்
தீரந் துலைந்த தமிழ்நாடு. 2.

சிங்களம் புட்பகம் சாவகம்—அக்கரை
தேசம் பலவினும் சென்றேறி—அங்கும்
தங்கள் வறுமையும் துன்புந் துடர்ந்திடச்
சோற்றுக் கலைபவர் தாய்நாடு. 3.

சீனம் ஜப்பான் ஐரோப்பா வென்ற
தேசம் பலவும் இகழ்வீசி—அஞ்
ஞானம் அடைத்தொழில் நாணுதலும்—மிக
இன்று வளர்த்த தமிழ்நாடு. 4.

வஞ்சக வீரர்கள் வாழ்நாடு—காமக்
கஞ்சுக வீரர்கள் வாழ் நாடு—பொய்யை
நெஞ்சகத்தே கொண்டு அஞ்சாமல் கூறிடும்
பஞ்சைகள் வாழுந் தமிழ்நாடு. 5.

இன்னல்வந் துற்றிடும் போதினி லஞ்சும்
இழிய வர்வாழுந் தமிழ்நாடு—மற்றும்
தன்னலம் பேணி யிழிதொழில் புரியும்
தன்மையர் வாழுந் தமிழ்நாடு. 6.

மானங் குறைந்த தமிழ்நாடு – உயர்
மாண்புங் குறைந்த தமிழ்நாடு
ஈனம் மிகுந்த தமிழ்நாடு—என்றும்
இன்பு மொழிந்த தமிழ்நாடு. 7.

வன்மை யிழந்த தமிழ்நாடு—உயிர்
வளமுங் குறைந்த தமிழ்நாடு—இன்னும்
தொன்மை முழங்குந் தமிழ்நாடு—வலி
தோளுங் குழைந்த தமிழ்நாடு. 8.

பண்டங்கள் பலவிதம்

—:(o):—

("பலகாரப் பிரியன்.")

நமது தமிழ் நாட்டில் சிறிது நாட்களாக, பத்திரிகைகளும், பலகாரங்களும் அதிகரித்து வருகின்றன. ஆனால் இந்த கட்டுரையில் பண்டங்களை மட்டும் விவரித்திருக்கிறது. முதன்மையான பண்டங்களின் குணம், உயர்வு, பரப்பு இவைகள் இங்கு எழுதப்பட்டிருக்கின்றன.

மைசூர் பாகு:—இதில் மைசூரில் சிறு பாகம் ஏதும் இருக்கிறது என்று நினைக்க இடமில்லை. சில கடைகளில் இது மெரீனா பீச்சில் அகப்படும் மணல் போல இருக்கிறது.

பக்கவாடா:—துக்கடா விடுபவர்களிடம் கூட இதன் கச்சடா சாய்ந்து விடும். சில பல் வைத்தியர்கள் பல்லை யந்திரமில்லாமல் பிடுங்குவதற்கு உபயோகிக்கிறார்கள் என்று கேள்வி.

ஜாங்கிரி:—இது முறுக்கு மாதிரி வெளிப் பார்வைக்கு தெரியினும் மிகவும் மிருதுவான பாகு சங்கதி. வெகு தித்திப்பாயும் ருசியாயுமிருக்கும். ஒரு வெள்ளைக்காரன் இதை சாப்பிட்டு விட்டு இதனுள்ளே எப்படி தேனை விட்டார்கள் என்றானாம். நம்மூரி விருந்து பார்லிமெண்ட் மீட்டிங்கிற்கு போகிறவர்கள் ஒரு கூடை குலோப்ஜானும் ஜாங்கிரியும் கொண்டு போய் பிரித்துக் கொடுத்தால் அடுத்த நாளே சுயாராஜ்ஜியம் வந்து விடும். கையில் ஒரு சொட்டு கூட விடாமல் நக்கி விடுவார்கள். கைகூட கழுவ வேண்டியதில்லை.

குலோப்ஜான் :— எங்கள் கசாப் கடை சாப்ஜானுக்கும் இதற்கும் ஏதாவது தொந்தார்த்த மிருக்குமோ வென்று ஒரு நாள் சந்தேகப்பட்டேன். ஆனால் என் நண்பன் பாலு அன்றைக்கு ஒரு அணாவுக்கு வாங்கிக் கொடுத்த பிற்பாடு தான் இது முற்றிலும் வேறு என்று தெரிந்து கொண்டேன். அதற்குப் பிற்பாடு தான் இதன் மகிமையும் குணமும் தெரியவந்தது.

காராபூந்தி:—இதில் முன் பாதியேதும் மறைந்து போயிருந்தால் பாதி வாசித்துவிட்டு வாயில் ஜலம் ஊற வைத்து விடாதீர்கள். சில கடைகளில் இந்த காராபூந்தியில் அபாரமான உப்பைக் கலந்து விட்டு பேதிக்கு கொடுத்து விடுவதற்கு விளக்கெண்ணை சிலவு இல்லாமல் உதவுகிறார்கள்.

ஓமப்பொடி:—மூக்கிலே போடும் ஷண்முகம் ஆகர்ஷணப் பொடியோடு இதைச் சேர்த்து விடாதீர்கள். இது முற்றிலும் வேறே சங்கதி. இதில் அதிகம் ஓமம் மட்டும் இல்லை யென்று தெரிந்து கொள்ளுங்கள். ஒரு தட்டில் வைத்திருக்கும் போது தூரத்திலிருந்து பார்த்தால் கல்லாய் சமைந்த போன நாக்குப் பூச்சிகளைப் போலிருக்கும்.

சேவு:—இது ஒரு இனிப்பு வஸ்து. இதை வாங்கித் தின்பவர்கள் இதன் அர்த்

தத்தின்படி பணத்தை சேவு (Save) பண்ணுவார்கள். அதாவது மிச்சம் பிடிப்பார்கள் என விளங்கும்.

காராசேவு:—இதென்ன கொஞ்சம் காரம் தானே கூட என்று சொல்லி தித்திப்பு சேவை வாங்கி மிள்காய் பொடியில் தொட்டுக் கொண்டு தின்று விடாதீர்கள். இதற்கு வேறு பிரிப்பரேஷன். அதை எங்கள் வீட்டு சோம்பாயிடம் கேட்டு அப்புறம் சொல்லுகிறேன்.

தயிர்வடை:— இது ஆமவடை, உளுந்து வடை, மெதுவுவடை, வெங்காய வடை, கீரைவடை, மசால்வடை, கலவடை, பாவாடை முதலியவைகளுள் ஒன்று. நன்ருக தயிரில் ஊறியிருந்தால் நூறு வேண்டுமானாலும் தின்று விடலாம்.

கேஸரி:-எதடா இது, சிங்க ரோஸ்டு (கேஸரி—சிங்கம்) எதும் வந்திருக்கிறதா என்று விழிக்காதீர்கள். இது கோதுமை நெய்யில் சர்க்கரையும் நெய்யும் சேர்த்து செய்த ஒரு ருசியுள்ள பதார்த்தம்.

ஐஸ் கிரீம்:—எந்தப் பெரிய ஹோட்டலிலும் இது இல்லாவிட்டால் மதிப்பு இல்லவே இல்லை. முதன் முதலில் இது நம்மூருக்கு வந்த புதுசில் இதைப் பற்றிய கதை ஒன்றிருந்தது. படியாத ஒருவர் ஒரு ஹோட்டலில் நுழைந்து சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது ஐஸ்கிரீம் இருக்கும் விவரம் தெரிய வந்தது. அவருக்கு அந்தப் பேரே விளங்க வில்லை. பக்கத்திலிருந்த ஒரு ஆசிரியரை ஐஸ்கிரீம் என்ருல் என்ன அர்த்தம் என்று கேட்டார். அவர் சிறிது நேரம் யோசித்து விட்டு, 'ஐஸ்கிரீம் (I scream) என்ருல் நான் கத்துகிறேன்' என்று அர்த்த மென்ருர். புதியவர் உடனே வெளியே ஓடி வந்து விட்டார். மற்ருெரு சமயம் புதிதாக நாகரீகம் கற்றுக் கொள்ளும் ஒரு டாம்பீகர் ஒரு ஹோட்டலில் போய் சாப்பிட்டதும் வேலைக்காரன் அவரைப் பார்த்து உங்களுக்கு; "டீ வேணுமா, ஐஸ்கிரீம் வேணுமா" என்று கேட்க அதற்கு அவர் "எதுவாயினும் சரி சுடச் சுட இருந்தால் போது மென்ருர்.

பால் போளி:—கிரீஸ் தேசத்துக்குப் பக்கத்தில் 'ஆர்ச்சிப்பலாகோ' என்று சொல்லப்படுகிற சிறு சிறு தீவுகளைப் பார்த்திருக்கிறீர்களா? பார்த்திருந்தால் அதை நினைவுக்கு கொண்டு வாருங்கள். ஒரு பெரிய தேக்ஸா பால், அதாவது வெள்ளை திராவகத்தில் சில போளிகள் தீவு போல மிதக்கும். அது தான் இது.

கொளுக்கட்டை:— இது நீண்ட காலத்ததும் புராண சம்பந்தமுமான ஒரு தின்பண்டம். இது எந்த ஊரிலு மிருந்தும் இறக்குமதி செய்ததல்ல. இது முற்றிலும் சுதேசி. இது பாட்டிமார்கள் தங்கள் பேரப் பிள்ளைகளுக்கு செய்து கொடுக்க மிக்க பிரியப்படுவார்கள். அடிதடி சண்டை நடந்த பிற்பாடு கூட சிலருடைய முதுகுகளில் இது உற்பத்தியாகிறது.

பணிகாரம்:—இந்தப் பேரே நமக்கு சர்வ சாதாரணம். புதிதாகக் கல்யாணம் செய்த வீட்டில் இந்தப் பேரைக் கேட்கலாம். இதற்கும் கடிகாரத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை யென்பதை அறியவும்.



வரலக்ஷ்மி விரதம்

—:(o)—

(ஸ்ரீமதி.)

1

"ஆஹா என்னே! தேவியின் சோதனை. இத்தனை வருஷங்களாய் எவ்வளவோ சீரும் சிறப்புமாய் நடத்திவந்த வரலக்ஷ்மி விரதத்தை நாளைய தினம் அனுஷ்டிக்க முடியாதுபோலிருக்கிறதே. ஜெகன்மாதா! யாரையாவது யாசித்தேனும் நாளைய விரதத்திற்கு பணம் சேகரித்து வருவதாகச் சொல்லிச் சென்ற என் கணவரும் இன்னும் வந்தபாடில்லையே" என்று ஓர் மாது தனக்குத்தானே சொல்லிக்கொண்டிருந்தாள்.

"லக்ஷ்மி" என்ற ஒரு குரல் கேட்கவும், "ஆ நாதா, ஏதாவது கிடைத்ததா" வென்று லக்ஷ்மி என்னும் அம்மாது தனது கணவராகிய நாராயணனை நோக்கிச் சென்றாள்.

"ஏதும் கிடைக்கவில்லை. இதுவும் சர்வலோகமாதாவின் சோதனைபோலும்" என்று சொல்லிக்கொண்டு உள்ளே வந்தார் நாராயணன்.

"நாதா, எவ்வாறேனும் நாளைக்கு வரலக்ஷ்மி நோன்பை அனுஷ்டிக்கும்படி தேவிதான் அருள் புரியவேண்டும்" என்று துக்கத்துடன் லக்ஷ்மி தனது நாயகனை நோக்கிக் கூறினாள்.

நாராயணன் ஒரு காலத்தில் விஷ்ணுபுரத்திலுள்ள பெருந்தனிகருள் ஒருவராயிருந்தவர். அவருக்கு தேவியருளால் புத்திர பாக்கியத்துக்கு குறைவில்லை.

"எல்லாம் தேவியின் அருள்" என்று நினைப்பவர் நாராயணன். ஆகவே வருடந்தோறும் அவரது வீட்டில் வாலக்ஷ்மி விரதம் வெகு சிறப்பாய் நடத்துவது வழக்கம். பக்தரை பரீக்ஷித்து போஷிப்பதே தனக்கு முறையாகக் கொண்டுள்ள பத்மாசனியானவள் தனது சோதனையை இவர்களிடம் காண்பித்தது வியப்பன்று. நாளடைவில் குன்று போலிருந்த செல்வம் குறைய ஆரம்பித்து தற்போது தேவியின் தினத்தைக் கொண்டாடவும் சக்தியற்ற ஸ்திதியை அடைந்துள்ளார்.

2

நடுநிசி, எங்கும் கும்மிருட்டு. வானத்தில் விண் மீன்களும் மேகத்தில் மறைந்திருந்தன. மழையுஞ் சிறிது தூறிக் கொண்டிருந்தது. மறுநாள் வாலக்ஷ்மி விரதத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்துவிட்டு ஊரிலுள்ளோர் அனைவரும் அயர்ந்து நித்திரைபுரிந்து கொண்டிருந்தனர். எங்கு பார்க்கினும் நிசப்தம் குடி கொண்டிருந்தது.

இந்த பயங்கர வேளையில் ஒருருவம் தயங்கித்தயங்கி ஊர்ப் புறத்தேயுள்ள அரசன் ராஜவர்மனது அரண்மனையை நோக்கி சென்று கொண்டிருந்தது. அப் பயங்கர இருளில் போய்க் கொண்டிருந்த அவ்வருவம் யார்? அது ஏன் அரண்மனையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது? என்பதை ஈசனே யறிவார். அவ்வுருவம் மெல்ல நடந்து அரண்மனையை அடைந்துவிட்டது. உடனே ஓர் மூலைக்குச் சென்று ஓரிடத்தில் தன்னிடமிருந்த ஆயுதங்களால் கன்னம் வைத்தது. உள்ளே புகுந்து பார்த்ததில் அது அரண்மனையின் பூஜையறை யென்பதையறிந்த அவ்வுருவம் அளவற்ற ஆனந்தமடைந்தது. பூஜையறையில் வைத்திருந்த விளக்கின் ஒளியால் அங்கு மறுநாட்காலை வாலக்ஷ்மி விரதத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகள் யாவையும் சித்தமாய் வைத்திருப்பதை யறிந்து மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தது. அவற்றில் தனக்கு பூஜைக்கு வேண்டிய சாமான்களைப் பொறுக்கி சிறிது எடுத்து ஓர் மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு திரும்புங்கால் கால் இடறி கீழே விழுந்துவிட்டதில் கால் கட்டைவிரலில் காயம்பட்டு நகத்தில் ஒரு பகுதி தரையில் விழுந்ததை யுணர்ந்தான் அக்கள்வன். வீட்டில் நகம் விழுந்தால் தரித்திர முண்டாகுமென்று பெரியோர்கள் கூறியிருப்பதினால் அவ்வாசனுக்கு தரித்திரதசை வரப்போகிறதே யென்று வருந்தி தனது கையால் தரையில் தடவி அந் நகத்தை தேடிக் கொண்டிருக்கும்போது துர் அதிர்ஷ்ட வசத்தினால் அங்கு வைத்திருந்த வெண்கல குத்து விளக்கு அவன் கைபட்டு விழுந்து ஓசையுண்டாக்கிவிட்டது. அந்த சப்தம் கேட்ட அரண்மனைக் காவலர்கள் அனைவரும் ஓடிவந்து கள்வனைக் கண்டுபிடித்து விட்டனர். அக்கள்வன் யார்? தேவியின் பக்தனை நமது நாராயணனு இத்தகைய காரியம் செய்யத் துணிந்தான்? எப்படியேனும் வாலக்ஷ்மி விரதத்தை மறுநாள் கொண்டாட வேண்டுமென்ற ஆவல்தான் இவ்விதம் செய்யத் தூண்டியது போலும்.

3

தனது அரண்மனையில் களவாடப் பட்டதை யுணர்ந்து கடுங்கோபங் கொண்டான் ராஜவர்மன். அரசனது அரண்மனையில் கன்னம் வைத்து களவாடத் துணிந்த அவனது துணிவைக் கண்டு ஆக்ரோஷமடைந்து அந்தணனை அழைத்து ஆராமா விசாரித்தறியாது உடனே அக் கள்வனைத் தூக்கி லிடும்படி உத்தரவிட்டான் ராஜவர்மன்.

இச் செய்கை லக்ஷ்மியினது காதுக் கெட்டியதும் அவள் புழுபோல் துடிதுடித்தாள். ஆயினும் என் செய்வது? காரியம் மிஞ்சிவிட்டது. உடனே அவள் விரைந்து சென்று அரசனை நேரில் கண்டனள். (அக்காலத்தில் குடிகள் அரசனை நேரில் காண்பது வெகு சுலபம் போலும்) தனக்கு மாங்கல்ய பிச்சை தரும்படி மன்னனை வேண்டிக் கொண்டனள் மாது. தனது கணவர் தாங்கள் ஆதிமுதல் அனுஷ்டித்து வந்த வாலக்ஷ்மி விரதத்தை கைவிடமாட்டாது எவ்வாற்றனும் இவ்விரதத்தை

நிறைவேற்றக் கருதியே அவ்வினத்தொழிலைக் கைக்கொண்டதாகவும் தனது கணவர் பூஜைக்கு வேண்டிய சாமான்கள் தவிர மற்றொன்றையும் விலாற்கூட தொட்டிருக்க மாட்டாரென்றும் அப்படி தங்களுக்கு சந்தேகமாயிருந்தால் அவர் மூட்டையை அவிழ்த்துப் பார்த்து பரீக்ஷிக்கலாமென்றுங் கூறினாள். அதுவுந்தவிர தன் நாயகனை அன்றுமாத்திரம் விட்டுவிட்டால் தான் சுமங்கலியாயிருந்து அன்று அவ்விரதத்தை அனுஷ்டித்துவிட்டு மறுநாள் தானும் தனது நாயகருடன் உயிர்விட சித்தமாயிருப்பதாய் பிரமாணஞ் செய்து கூறினாள்.

இதுகேட்ட அரசன் அக் கள்வனை அழைத்து வரச்செய்து அம் மூட்டையை அவிழ்த்துப் பார்த்ததில் அதில் பூஜைக்கு வேண்டிய சாமான்கள்மட்டு மிருக்கக் கண்டு அவர்களது பக்திக்கு வியந்து நாராயணனை மன்னித்து விடுதலை செய்ததுமன்றி அன்று அவர்கள் விரதத்திற்கு வேண்டிய தனத்தை யளித்து அவர்களை யனுப்பினான்.

நாராயணன் வீட்டில் அன்று விரதம் வெகு சிறப்பாய் நடந்தேறியது.

தேவியின் கடாக்ஷத்தினால் நாராயணனுக்கு அரண்மனையில் ஓர் உத்தியோகம் அளிக்கப் பெற்றது. அதுமுதல் விஷ்ணுபுரத்தில் வரலக்ஷ்மி விரதம் அனுஷ்டிப்பது மிகவுங் முக்கியமாய் கருதப்பட்டது. நாமும் வரலக்ஷ்மி விரதத்தை அனுஷ்டிப்பதின் முக்கிய கருத்தை யுணர்ந்து விஷ்ணுபுர வாசிகளை பின்பற்றிநடந்து கமலவல்லியின் கடாக்ஷத்தைப் பெறுவோமாக!

"என் ஸார், இந்த ஊர் நல்ல ஊர் தானே!"

"அதை யேன் கேட்கிறீர். இந்த ஐந்து வருஷமா டாக்டர் தவிர வேறே யாரும் சாக வில்லை."

"அவர் மட்டும் ஏன் இறந்தார்?"

"வரும்படியே கிடையாதன்று."

பாப்பா பேசுகிறது

(பேத்தி.)

எங்கள் வீட்டு ஒலி பரப்பில் இன்று பாப்பா அழைக்கிறது- உங்களெல்லோரையும்.

என்னை அம்மா பேபி என்கிறாள். அப்பாவோ பி யே பி (B. A. B.) என்கிறார். என் முழுபெயர் காமாக்ஷி ஆகும். எனக்கு இன்னும் எவ்வளவோ பெயர்கள் இருக்கின்றன.. உமக்கு தெரியவேண்டுமா? சொன்னால் பிறகு தெரிவிக்கிறேன். ஆனால் என்னையாராவது கேட்டால் பாப்பா என்றுதான் சொல்லுவேன்.

என் வயது 2. சிறியவளாயிற்றே என்ன சொல்லப் போகிறாள் என்று கருதி விடாதீர்கள். என் சரித்திரத்தை கேட்டுத் தான் ஆகவேண்டும். என்ன கட்டாயம் என்கிறீர்களா? கேளா விட்டால் போங்களேன். எனக்கு அதனால் ஆகவேண்டியது ஒன்றுமில்லை. ஆனால் பிறகு வருந்தவேண்டாம். அப்படித்தான் நான் என்ன சிறியவளா? எவ்வளவு நாட்கள், எவ்வளவு மணி, அப்பா, எவ்வளவு நிமிஷம் வினாடி. கணக்கிடுங்கள்.

எனக்கோ அம்மாவைப்போல் பெரியவளாக வேண்டுமென்ற ஆசை—சீக்கிரம் வளர்ந்து என்னைச்சுற்றிலும் என்னென்ன இருக்கின்றன என்று பார்க்க மீளா ஆசை. ஆனால் நான் எதை எடுத்தாலும் முதலில் புதுசு; பிறகு இரண்டொரு நிமிஷங்களில் அது பழையது ஆகிவிடும். பிறகு அதை கீழே எறிவேன். தவறினால் டொப் டொப்பென்ற கீழே அடிப்பேன். அதற் கேற்ப எனக்கு சங்கீத ஞானம் புறப்படும்- அழுகை என்கிறீர்களா என்ன- அதுவில்லை. அதற்கு சமயம் வேறு. அந்த டொப்....டொப்பிற்கு த்தா....த்தா....ப்பா ....ப்பா என்ற பாட்லே ஒத்து. பாடலின் அவஸ்யம் உமக்கு என்ன தெரியும். அம்மாவுக்கு ஒருசமயம் தெரிந்தால் தெரியும். அது என்னமோ எனக்கு நிச்சயமாகத் தெரியாது.

எனக்கு அப்பாவே போல'—(என் இலக்கிய இலக்கணம் அடிக்கடி மத்தியே மத்தியே இல்லை என்றால்—அப்படி எழுத முடியாதுன்னு உங்களுக்கு தெரிஞ்சுருக்கணம்—என்றாலும் நான கோக்தே இல்லையா?) முணுமுணுக்குனும்றதே இல்லை. ஆனால் நான பன்றதுக்கு குறக்கே வந்தா தான் என்னமோ என் 'டீச்சர்' அழுகை யார் வருவார். பிறகு ஒரே சப்தம்தான். எனக்கு எது இஷ்டமோ அது அம்மாக்கு பிடிக்கிறதில்லை. நான் அழுதா அம்மாக்கு எனனுபோச்சி! 'ஏன்தான் அப்படி தொண்டையே கிழிச்சிக்கிறயோ'' ன்றா.

அம்மாவும் அப்பாவும் ஒரு மாதிரி— உங்களுக்கு தெரிணுமே. அவா ஒவ்வொவா தான். என்ன? அவாளுக்கு என்னென்னன்னு இருககோ அதெல்லாம செய்யார. அதென்னயோ அது எனக்கு பிடிக்கிறதில்லை. எனக்கு அம்மாவின்பேரில்தான் ரொம்ப பிரியம்—ஆனா நாக்கே இழுத்து பிடிச்சால் இன்னும ஆசையா இருக்கும். ஒரு காரணமும் இல்லாதே இதைந்த பண்ணுதே; அத்தே பண்ணுதேங்கறா. இது எல்லாம் பிடிகை.

எனக்கு வேலையுள்ள ஒரு நாளைக் கவனியும். எனக்கு எப்போ இஷ்டமோ அப்போ எழுந்திருப்பேன். நான் எழுந்தாலும் சரி எழுந்திருக்கா போனாலும் சரி; யாரும் என்னை கேக்காதே இல்லை—கவனிப்பதாகத் தோன்றுவதில்லை. ஆமாம். அம்மா எழுந்திருக்காத்துக்கே முன்னே எழுந்துட்டேன்னு அழுது தெரியப்படுத்தினா திரும்பியும் படுத்துக்கச் சொல்றா. எத்தனை நாழிக்கப்புறம் கழிச்சி எழுந்தாலும் கேக்காதே இல்லை—அப்பா கூட.

இன்னும் கொஞ்ச நாழிலே என்னை அம்மா பின்னாலே போறதே பாருங்கோ. எனக்கோ அம்மா பின்னாலிருந்து எனக்கு தோன்ற காரியத்தே பண்றதுன்னா எவ்வளவு சந்தோஷம். அவ்வளவு சந்தோஷம் நான் பண்ற பேருதவியே அம்மா கேக்காதே இல்லை.

எனக்கு நேரே என்னமோ இருக்கு. அதே பிடிச்சண்டு எட்டி பார்கேன். அதுக்குள்ளே அம்மா வரா "ஏண்டி தண்ணே கொட்டினே. அரை நிமிஷம் ஒற்னே இருக்கிறதில்லே டாப்பா"ன்னு சொல்லி என்னே தூக்ிண்டுபோரா போயி எங்கியோ உட்றா.

நேக்கு அங்கே மாத்திரம் வேலே இல்லையா? அங்கே சுத்தியும் முத்தியும் பார்கேன். மண்ணுகிட்டே போகனும்னு தோன்றது. அங்கே போரானுன்னா எனக்கு ரொம்பொபிடிக்கும். மண்ணே வீசிவீசி போட்டா எங்கே விழாது. கையே வாயிலே வச்சிண்டா நன்னாதான் இருக்கு. அப்பவும் எனக்கு பாட்டு கிளம்பும். அதுக்குள்ளே எங்கம்மாதான் தெரியுமே—வந்துடுவா. "மண்ணு கிட்டே போகாதே போகாதே" என்ற மொழிகள். என் வாயைப் பார்த்து "மண்ணே தின்னாதே தின்னாதே" என்று இரண்டுபூசை மண்ணு ருசியும், அது காத்திலே பறக்கற வேடிக்கையும் இன்னும் எத்தனையோ அவாளுக்கு என்ன தெரியும். கோபியே கேளுங்கோ சொல்லுவான்.

இப்போ அடுப்பங்கரை யேண்டையும் எனக்கு வேலையிருக்கு. அங்கே பளிச்சினு என்னமோ தெரிறது. அங்கே போரேன். அம்மா தெரியாத வச்சிறிக்கிறதே ஒண்ணெண்ணு வெளியே எடுக்கிறேன். அப்பறம் சோபா என்னமோ தெரிசது. அது அழகா யிருக்கு. அங்கேயும் இருக்கணம்னு எனக்கு ஆசை. அதுக்குள்ளே "ஐயோ பேபி, நெருப்பிண்டே போகாதே; சுட்டுடும்" என்ற முழக்கத்துடன் மற்றொரு தூக்கல்.

எங்கே என்னை அம்மா உட்டுட்டாளோ தெரியாது. இப்போ எனக்கு பெரிய யோசனை. மண்ணுக்கிட்டே போலாமா? வீதிக்கு போலாமா? அப்பா ஆபீசுக்கு போலாமான்னு. என்னமோ சொட் சொட்ன்றதே என்னது. உம்; அங்கேதான் போகணும். அங்கே ஜலம் ஜில்லுனு விழாது. அதே கையிலே பிடிச்சிண்டு இருக்கேன். தலையும் சொக்காயும் சில்லின்னு எப்படியோ இருக்கு. எவ்வளவோ நன்னா இருக்கு அங்கேயும் அம்மாவா! ஒரு காரியமும் செய்ய உட்றதில்லை. "பேபி, பேபி, எங்கே இருக்கே அம்மா நோக்கு பசிக்கில்லையோடி" அம்மா எப்போ இப்படி கூப்டாலும் எனக்கு வேலை மறந்துபோகும். என்ன ஆசையா அன்பா கூப்பற்று பாரு! என்னைப் பாத்தாலோ இல்லையோ கொஞ்சம் கோவம். "இனிமே கொழாயிண்டே போகாதேம்மா. சளி பிடிச்சுடும்" எனக்கு ஆத்திலே சாப்பிட்டா பிடிக்காது. கொஞ்சம் அழுவேன்; அப்பத்தான் அம்மா வீதிக்கு வருவா. அங்கே கூ....கூன்னு நாயி வரும்; அதுக்கூட சாப்பிட்டாதான் எனக்கு பிடிக்கும். அப்போ அம்மா "ஆ.... ஆ... ஆ"ன்னுவா. இன்னும் என்னே வந்து "அம்மாடி.... அம்மா"ன்னுவா. நான் எப்படி அம்மாவுக்கு அம்மாவோ தெரியாது. இன்னும் "என் முத்தே............சின்னுகண்ணு .... ஒரேதரு வாயி"ன்னு முத்து கொடுப்பா. அப்போதான் அம்மான்னு அம்மா.

அப்பறம் "தூக்கம் வந்துடுத்துடி கண்ணே"ன்னு தொட்டில்லே உடுவா. உட்டு ஆட்டுவா. கொஞ்சம் ஆட்டிட்டு

"சம்பந்தம் சரிதானே!"

(கா. சி. ஸ்ரீ.)

தம் தொழிலில் சரியான வரும்படி கிடைக்காததால் ஒரு சமயம் குப்பா ஜோஸ்யர் நடையிலேயே காசி யாத்திரை புறப்பட்டார். ஆங்காங்கே நூதனமாய் தம் இனஸ்தர்கள் கலியாணத்திற்கு வதுவரன்கள் உண்டோ என வினவ பார்த்துச் சொல்வதாய் கூறி ஜாதகங்களையும் விலாசம் முதலிய விபரங்களையும் எழுதி வாங்கி வந்தார். இதில் சுமார் 500 பெண் ஜாதகங்களும் 275 ஆண் ஜாதகங்களும் கிடைத்தன. இதைக் கொண்டு ஓர் தொழில் நடத்தலா மென்று ஆலோசித்து பிரபல பத்திரிகைகளில், "கலியாணத்தைப் பற்றிய கவலை இனி பெற்றோர்களுக்கு வேண்டாம். ஜாதகம், குடும்பம், யோக்யதை, நிலைமை முதலியவைகளுக்குச் சரியான பொருத்தம் பார்த்துத் தெரிவிக்கப்படும். ஜாதகம் ஒன்றுக்கு அட்மிஷன் பீஸ் ரூபாய் 2. சேர்ச்சிங் (ஆணுக்குப் பெண், பெண்ணுக்கு ஆண் ஜோடி சேர்க்க) கட்டணம் ரூபாய் 5. முழு விபரங்கள் அறிய. 'கலியாண நிலையம்—மீடியேட்டர் — குப்பா சாஸ்திரி—குஞ்சா குளம்.' என்ற விலாசத்துக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்" என்று விளம்பரம் செய்திருந்தார்.

அதனால் அவருக்கு மூலை முடுக்குகளிலிருந்து ஏராளமான ஜாதகங்களும் பணமும் வந்து குவிந்தன. கோத்திரம், பேர் ஜாதகம், பெற்றோர் தொழில், ஐவேஜி

எங்கேயோ போயிடுவா. நேக்கு எப்பவும் தொட்டில்லே படுத்துண்டு தூங்கானு என்னமோ கொஞ்சத்திலே தூக்கம் வர்ரதில்லே. ஆட்டிண்டே இருந்தா ஆட்டிண்டே இருக்கணம். நானு கொஞ்சம் அழுதாதான் அம்மா வருவா. இன்னும் கொஞ்சம் பலமா அழுதாதான் ஆட்டிண்டு என்னமோ பாடுவா. "ஆராரோ ....பசுங்கிளியே....கண்...."ணுன்னு என் காதிலே விழுறாப்பே இருக்கு. இப்போ எனக்கு எப்படியோ எங்கேயே போறாப்லே இருக்கு. அதுக்கப்பறம் என்னவோ எனக்கு தெரியாது. உனக்கு தெரிஞ்சா சொல்லு. மிச்சது நாளைக்கி.

முதலியன தலைப்பு வரியாக ரிஜிஸ்டரில் பதிவு செய்தார். இவைகளைப் பார்த்து ஜோடி சேர்ப்பதும், கலியாணம் ஆனவைகளை விலக்கல் செய்வதும், முடிவு செய்வது பற்றி கரஸ்பாண்டன்ஸ் செய்வதும் பெரிய ஜோஸியாகி விட்டபடியால் குமாஸ்தா நியமித்தும் ஆபீஸ் ஜோலி பார்த்து வந்தார்.

நிற்க அனந்தராமய்யர் தம் குமாரி மீனுவுக்கு வயது 11 ஆகியும் விவாகத்துக்கு சரியான வரன் கிடைக்காததைக் குறித்து வருந்தினர். உடனே குப்பா சாஸ்திரிகளுக்கு எழுதினர். மீனுவுக்கு ஒரு கண் முழி குருடென்றும் 13 வயதுள்ள சுப்புசாமி என்ற அண்ணன் இருக்கிறானென்றும் அறிந்தார். இதற்குச் சரியான சம்பந்தம் கைலாசபுரம் பத்மனுபய்யா வென்று தெரிந்து கொண்டு தாம் நேரில் போய் முடிப்பதற்கு ரூபாய் பதினைந்து படிச்செலவு தேவை யென்று வேப்பிலை யூரணி அனந்தரா மய்யருக்கு ஒரு ஜாப் எழுதி ரூபாயைப் பெற்றுக் கொண்டார்.

உடனே கைலாசபுரம் பத்மனுபய்யருக்கு அடியில் கண்டவிதம் கடிதம் எழுதினர். 'உம்முடைய பெண் அம்புஜத்துக்கு சரியான வரன் பார்த்திருக்கிறேன். வயசோ 10 ஆகிறது. காலோ ஊனம். தந்திரமாய் நான் சொல்லுகிறபடி செய்ய வேண்டும். மாப்பிள்ளை வெகு அழகு வயசு 13. பெயர் சுப்புசாமி. நான் நேரில் போய் முடிக்க வேண்டும். படிச்செலவு ரூபாய் இருபதாகும். ஆனல் ஒரு நிபந்தனை, உம்முடைய பையன் கிட்டுவுக்கு வயசு பதினுன்காகி விட்டது. ஒரு பெண் பார்த்திருக்கிறேன். பெயர் மீனு, நல்ல அழகு வயது 11. (ஒரே பார்வையில் எல்லாம் கண்டு அறிந்து கொள்வாள்.) எங்கே மாப்பிள்ளை பார்த்திருக்கிறேனே அங்கேயே பெண்ணும். ஜாதகங்கள் பலே பொருத்தம். உமக்குச் சரியான சம்பந்தம், என்ன சொல்லுகிறீர். பதில் அவசியம் தேவை' என்பதுவே அதில் கண்ட விஷயம்.

பெண்ணை எப்படியும் தள்ள வேண்டுமே என்று ஏங்கியிருந்த பத்பனுபய்யா 'தங்கள் சம்மதம் என் பாக்கியம்' என சுருக்கமாய் விடை எழுதி ரூபாய் இருபதும் மணியார்டர் செய்தார்.

"அனந்த ராமய்யர் அவர்களுக்கு. உபயக்ஷேமம். கைலாசபுரம் சென்று சமீபத்தில் தான் வந்தேன். வெகு சிரமம். சரியான மாப்பிள்ளை கிடைத்தது தங்கள் யோகமே- வயசு 14, பெயர் கிட்டு, நல்ல அழகு. எல்லாம் முடித்து விட்டேன். ஆனல் ஒன்று. தம்பிள்ளை சுப்புவுக்கு பிராயம் 13 ஆகி விட்டது. எங்கே மாப்பிள்ளை பார்த்திருக்கிறதோ அங்கேயே பெண்ணும் பார்த்திருக்கிறேன். வயது 10 பெயர் அம்புஜா, சரியான ஜாதகப் பொருத்தம், வேலையில் கெட்டி. (ஒருக்கால் நீர் பார்க்கலாம், பம்பரம் போல் சுற்றி வருவாள்) உமக்குச் சரியான அந்தஸ்து. அப் பெண்ணை வாங்கியும் நம் மீனுவைக் கொடுக்கவும் வேண்டும். உம்முடைய அபிப்பிராயம் தேவை. உடனே பதில்" என வேப்பிலை யூரணிக்கு தபால் விடுத்தார்.

அவருடைய சம்மதம் பெற்ற கடிதம் வந்ததும் திருமலை சுவாமி கோவிலில் ஒரு நாள் இரா முகூர்த்தமாக கலியாணம் நடத்த நிச்சயம் செய்யப்பட்டது. வேண்டிய ஏற்பாடுகள் செய்து தாம் நேரில் வந்திருந்து வெகு தந்திரமாய் கிட்

டுவுக்கு மீனுக்ஷியையும் சுப்புவுக்கு அம்புஜாவையும் கன்னிகாதானம் செய்து வைத்தார் சாஸ்திரிகள். சம்பந்திகள் இருவரும் தத்தம் மறு மக்களின் சொஸ்திரத்தை அறிந்ததும் குப்பா ஜோஸ்யரைப் பிடித்திழுத்து ஒருவர், 'ஓய், நொண்டிப் பெண்ணுக்கு குருட்டுப் பெண் சமமா' என்றார். மற்றவர், 'சொத்தைக் கண்ணுக்கு நொண்டிக்கால் ஈடாகுமா' என்றும் கூச்சலிட்டார். சாஸ்திரிகள், யதார்த்தத்தைக் கடிதங்களில் தெரிவித்து சம்மதம் பெற்று தான் முடிவு செய்திருக்கிறதாய் எவ்வளவோ சொல்லியும் சமாதானமாகாத மனவருத்தத்துடன் தத்தம் ஊர் சென்றனர் இருதிறத்தாரும்.

II

மாதங்கள் பல சென்றன. கிட்டுவுக்கும் சுப்புவுக்கும் தீபாவளிக்கு அழைப்புக் கடிதங்கள் வந்தன. பெற்றோர்கள் தங்கள் தங்கள் பிள்ளைக்கு புத்தி சொல்லி அனுப்பித்தனர். 'மாமனர் வீட்டில் எல்லோரும் மெச்சும்படி சமத்தாய் நடந்து கொள்ள வேண்டும்' என்று கிட்டு உபதேசம் பெற்றுப் புறப்பட்டான். 'சுருக்கமாய் சாப்பிட வேண்டும்; அதிகமாய் பேசக் கூடாது' என்ற பாடம் கற்றுக் கொண்டு சென்றான் சுப்பு.

வேப்பிலை யூரணியில் கிட்டுவுக்கு நல்ல மரியாதை. பண்டிகை ஆன பிறகு சில நாள் தங்கினான். இதற்குள் அங்கேயுள்ள கைக் குழந்தை ஒன்றுக்கு கடுமை



யான ஜுரம் அடித்ததால் மாமனர் வைத்தியரைத் தேட அயலூர் சென்றார். மாமியும் மாப்பிள்ளையை குழந்தையைப் பார்த்துக் கொள்ளச்சொல்லி விட்டு மீனுவுடன் ஜலம் தூக்கச் சென்றாள். குழந்தையைத் தொட்டுப் பார்த்தான் கிட்டு. உடம்பு சுடுவதைக் கண்டு சற்று யோஜித்தான். தான் ஒரு தடவை நேரில் கண்ட சம்பவம்—(ஆசாரி நகை செய்கையில் காய்ச்சிய தங்கத்தை தண்ணீரில் முக்கி ஆற்றி

யது.) ஞாபகம் செய்து கொண்டான். தீராத காய்ச்சலைத் தீர்த்து விடலாமென்றும் கருதி குழந்தையைத் தூக்கி தண்ணீர் கொப்பரையில் மூக்கி வைத்து விட்டு மாமியின் வரவை எதிர்பார்த்த வண்ணமாயிருந்தான்.

நெடுநேரம் பேசியிருந்து விட்டு வந்தாள் மீனாவுடன் கிட்டுவின் அத்தை. மாமியைக் கண்டதும், 'சமத்து மாப்பிள்ளையைப் பெற்ற அத்தே—இளித்துக் கொண்டதே பல்லைச் சித்தே' என தன் செய்கையைக் கூறி குழந்தையைக் காட்டினான். இதற்குள் மாமனாரும் வைத்தியருடன் வந்து விடவே விஷயத்தை அறிந்து—கண்டபடி வைது வேண்டிய மட்டும் உதை கொடுத்து விரட்டி விட்டார். பின்பு கண்ணீரும் கம்பலையுமாய் குழந்தையை குழியிலிட்டனர். இப்படிப் பட்ட மாப்பிள்ளையைச் சம்பாத்யம் செய்து கொடுத்த குப்பா ஜோஸ்யருக்கு நடந்ததைக் குறித்து எழுதினார்.

நிற்க கைலாசபுரத்தில் நிகழ்ந்ததைக் கவனிப்போம். ஊறுகாய் என்றால் நம் சுப்புவுக்கு மிகுந்த பிரியம். இலையில் பரிமாறிய மாவடு நல்ல ருசி. அரை குறையாய் கடித்து வைத்து விட்டான். சாப்பாடும் கால் வயிறே உண்டுவந்தான். மாப்பிள்ளைக்கு வாயில் ஏதோ புண் என எண்ணியிருந்தார்கள் வீட்டார்கள். ஒரு நாள் இரவு மாவடுக்களை வேண்டிய மட்டும் திருடித் தின்று விட்டு ஒன்றை கன்னத்தில் ஒதுக்கியபடியே நித்திரை செய்து விட்டான். மாமனார்-கன்னம் வீங்கியிருந்தது கண்டு தொட்டுப் பார்த்து என்ன என்று கேட்க, தலை குனிந்து பதில் பேசாமலிருந்தான். மாப்பிள்ளை வேதனை பொறுக்காமலிருக்கிறான் என நினைத்து ரண வைத்தியரைக் கூப்பிட்டு வந்தார். எல்லோரும் சூழ்ந்து இருந்ததால் பிரமித்து நின்றான் சுப்புசாமி. வைத்தியர் தொட்டுப் பார்த்து மெதுக்கென்று நழுவியதால் பழுத்து விட்டதென்று நினைத்து, பளிச்சென்று மடியிலிருந்த கத்தி யெடுத்துக் கீறினார். இரத்தம் பீறிட்டது. வலி தாங்காமல் ஐயோ என்று கூப்பிட வாயிலிருந்த மாவடு தொப்பென்று கீழே விழுந்தது.

இவ்வித அசடை சம்பாதித்ததற்கு கூட நாலு உதை கொடுத்து முடுக்கி விட்டு எல்லாவற்றிற்கும் காரண கர்த்தாவாகிய சாஸ்திரிகளுக்கு எழுதினார். அவர் இரு கடிதங்களையும் பார்வையிட்டு ஒருவர் கடிதத்தை ஒருவருக்கு 'பார்வேட்' செய்து 'சம்பந்தம் சரிதானே' என குறிப்பிட்டு குமாஸ்தாவை டெஸ்பாச் செய்யச் சொன்னார்.

ஆக்ட் புத்தகங்கள்.

	ரூ.	அ.		ரூ.	அ.		ரூ.	அ.
இந்தியன் பினல் கோட் சட்டம்	3	0	பரம்பரை கிராமஉத்தி யோகஸ்தர்கள் சட்டம்	1	0	சர்ணம் டெக்ஸ்ட்	1	4
கிரிமினல் லா	3	0	இன்கம் டாக்ஸ் சட்டம்	1	0	ஸ்டாம்பு ஆக்ட்	0	12
சிவில் லா	3	0	லோகல்போர்ட் ஆக்ட்	2	0	ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட்	0	10
விவகார சிந்தாமணி	2	8	பஞ்சாயத்துச் சட்டம்	1	4	டிரஸ்டிகள் சட்டம்	0	12
பெரிய ஹிந்து லா	2	0	இந்துதேச சாட்சிஆக்ட்	1	0	கால நிர்ணயச் சட்டம்	0	8
மூகம்மதியன் லா	2	0	தேவஸ்தான சட்டம்	1	0	நில ஆக்கிரமிப்பு என்குரோச்மென்ட் சட்டம்	0	4
கிராம முன்சிப் சட்டம்	1	8	எஸ்டேட் லாண்டு ஆக்ட்	1	4	கிராமச் சுகாதாரம்	0	2

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

புதுச்சேரி சில்க்

(''சின்னசாமி'')

'என்டா சின்னு, நீ புதச்சேரிக்குப் போறதாக சாமா சொல்ருனே, நிஜந்தானுடா?'

'ஆமாம் பாட்டி, என்ன சமாச்சாரம் ஏதாவது வாங்கிண்டு வரனுமா?'

'ஒன்று மில்லடா. நம்ம குழந்தை பங்கஜ மிருக்கா ளோன்னே அவளுக்கு ஒரு புதுச்சேரி சில்க் ஜாகிட் வேண்டுமாண்டப்பா. உன்னிடம் சொல்லச் சொல்லி வண்டாத் துளைக்கிருள்! ஒன்னு வாங்கிண்டு வந்து தலையேன். நோக்கு ரொம்பப் புண்யமா போறது!'

'அதற்கென்ன பாட்டி. இதுதானு பிரமாதம். கொடுங்கள் வாங்கிண்டு வரேன்!'

பாட்டி தன் புடவை முன்தானையை அவிழ்த்து ஒரு ரூபாயைக் கையில் எடுத்து வைத்துக்கொண்டு,

'ஒரு ரெண்டுகெஜம் ரோஸ் கலரிலே வாங்கிக்கோ. எது நல்லது? 'கிரேப்பா,' 'பூஜியா'?'

'கிரேப்புதான் பாட்டி'.

'சரி. சாயம் போகாததா நன்னு பார்த்து, அதிலேதான் ரெண்டு கெஜம் வாங்கிக்கோ............பட்டணத்தை விட அங்கே ரொம்ப சல்லிசுதானேடா?'

'ஆமாம் பாட்டி.'

அதற்குள் பாட்டி ஏதோ நினைத்துக் கொண்டவள்போல், 'நம்ம முந்தானையிலின்னு நாலுகாசு முடிபோட்டு வைக்கலாமின்னு இந்த பாழும் வீட்டிலே முடிவதில்லை. என்ன செயறது. நீ தான் சொல்லுடா நமக்கின்னு நாலுகாசு இருந்தால்தானேடா நல்லது. ஒரு தலையை வலிச்சுது, காலை வலிச்சுது-இல்லை-ஏதோ ஒரு பார்த்த வஸ்துவை வாங்கணும்; இதற்கெல்லாம் நம்மதின்னு இருந்தால் தானேடா முடியும்' என்று ஏதோ பீடிகை போட்டுவிட்டு, 'இந்த எழவு பிள்ளைகளால் போதும் போதுமென்ருகி விடுகிறது. அவா அப்பாவை போய் கேட்கமாட் டேன்கிறதுகள்; நம்மை வந்து பிச்சுப் பிடுங்குதுகள்! பங்கஜத்திற்கு வாங்கினல் ருக்கு சும்மாயிருக்க மாட்டாள், ருக்குக்கு வாங்கினுல் பங்கஜம் சும்மாயிருக்கமாட்டாள். ரெண்டு பேரும் சண்டை போட்டுக்குவா. தலையுது. அவளுக்கு ரெண்டு கெஜம் ரோஸ் கலரிலே வாங்கிக்கோ; இவளுக்கு ஒரு கெஜம் ருக்குமினி கலரிலே வாங்கிக்கோ. வேறே யாருக்கு இல்லாவிட்டாலும் போரது. காசு இருந்தால் சோப்பு, மிட்டாயெல்லாம்தான் வாங்கிண்டு வரச் சொல்லுவேன். என்ன செய்றது. என்னிடம் இந்த ஒரு ரூபாய்க்குமேல் இல்லை' என்று வருத்தப்பட்டு விட்டு ஒரு ரூபாயை 'சின்னு'வின் கையில் கொடுத்தாள்.

பிறகு ஏதோ நினைத்துக்கொண்டவள்போல், 'சின்னு, நான் சொல்ல மறந்

துட்டெடன். ஒரு அரைபடி முந்திரிபயிறு கூட வாங்கிக்கோ. அங்கே முந்திரி பயிறு ரொம்ப நயமாம்! காசு மீந்தால் ஒரு பொட்டி சோப்பு நன்னதா பார்த்து, கொண்டு வந்தால் வா, இல்லாவிட்டால் போரது. எது மறந்து விட்டாலும் சில்க்கும் முந்திரிபயிறும் மாத்திரம் மறந்து விடாதே டப்பா. ஆமாம்.'

பாட்டியின் பேராசையைக் கண்ட 'சின்னு' முணுமுணுத்தான். "அரை பணத்திலே கலியாணமாம்; அதிலே கொஞ்சம் பாணவேடிக்கையாம்! அதைப் போலிருக்கு இந்த பாட்டியின் கூத்து. கொடுத்திருப்பது ஒரு ரூபாய்! அதற்கு 3 கெஜம் சில்காம், அரைபடி முந்திரி பயிறும்! அதிலே மீந்தால் சோப்பு பெட்டியாம்! இத்துடனுவது விட்டுவிட்டாளே! 'ஜப்பான் பரம் ரெண்டு' என்று ஏன் சொல்ல மறந்து விட்டாள்?" என்று தன் மனதிற்குள்ளே நினைத்துக்கொண்டு பாட்டியை வைதா னுபினும்; வெளியில் தன் வெறுப்பைக் காட்டவில்லை. மிகவும் பொறுமையோடே,

'ஏன் பாட்டி, இந்த ஒரு ரூபாயில் என்னென்ன வாங்கிண்டு வர்ரது?'

'ஏண்டா! நான் சொன்னதெல்லாம் அதற்குள்ளா மறந்துட்டே?'

'இல்லே பாட்டி, மறந்து விடவில்லே. இந்த ஒரு ரூபாய்க்கு 3 கெஜம் சில்க் வாதின்னுதான் சொல்ல வந்தேன்!'

'என்ன வாரது! என்னடாது அநியாயமா யிருக்கு நீ சொல்ரது! புதுச்சேரிலே ஒரு ரூபாய்க்கு 3 கெஜம் சில்க் வாதின்னு யாராவதும் சிரிப்பா! அங்கே தெருவெல்லாம் சிபட்ரதாம். அங்கிருப்பவர்கள் அதைக் கையால் கூட சீண்ட்ரதில்லையாம். என்னடாது. நீ சொல்ரது வேடிக்கையாக இருக்கிறது! இங்கேயே செல்லாராம் ஷாப்பிலே கெஜம் நாலணு ஐந்தணுவிற்கு விற்கிறது. அங்கே ரெண்டணு மூனணுதான் இருக்கும். கெஜம் ரெண்டணு மூனணுன்னு மூனு கெஜத்திற்கு என்னடா ஆரது? நீ சொல்ருப் பலே நாலணுதான் வைச்சக்கோ. மூனு கெஜத்திற்கு, முக்கால் ரூபா தானேடா ஆரது. மேலேயே கால் ரூபாய் இருக்கோன்னே!'

'அவசரப்படாதே பாட்டி. நான் சொல்ரதே கொஞ்சம் பொறுமையா கேள்.'

'சரி நீதான் சொல்லுடாப்பா. கேக்கரேன்.'

'கஜம் ரெண்டணு மூனணுன்னு உனக்கு யார் சொன்னது?'

"கோடி ஆத்து சந்த்ரு தாண்டப்பா சொன்னுன். கேக்கென்ன தெரியும். போன மாதம் புதுச்சேரிக்குப் போனுனேல்லியோ, அப்போ சில்கா வாரிண்டு வந்தான். 'எப்படி டாப்பா கெஜம், சந்த்ருன்னே!' 'கெஜம் (பன்)னெண்டணு பாட்டி' இன்னுன்.'

'பாட்டி சந்த்ரு ரொம்ப சமத்து. ஒரு சமயம் வாங்கிண்டு வந்தாலும் வருவார். என்னுல் அதைபோல் ரெண்டணுவுக்கும் மூனணுவுக்கும் வாங்கிண்டு வா முடியாது. இந்தா சந்த்ரு விடமே கொடுத்து வாங்கிக்கோ.'

'சரிடாப்பா ஒரு ரூபாயிக்கு எத்தனை கெஜம் வர்ரதோ அதைத்தான் வாங்கிண்டுவா. அவ்வளவுதான்........என்ன செய்ரது.'

'அப்பாடா'ன்னு சொல்லி 'சின்னு' வாய்மூடு முன்பு அவன் தாய் அங்கு வந்தாள்.

'சின்னு, நம்ம அடுத்தாத்து லக்ஷ்முக்கு ஒரு பச்சைபூ போட்ட சில்க் புடவையும் ஒரு ஜாகிட் துண்டும் வேண்டுமாம். உன்னை வாங்கிண்டு வரும்படிச் சொன்னுள். அவ ஆம்படையானுக்கு முதல் தேதி சம்பளமாம்; வந்ததும் கொடுத்து விடுகிருளாம்' என்ருள்.

சின்னு, இயற்கையிலே முன் கோபக்காரன். பாட்டி வேறு அவன் பொறுமையை இழக்கும்படி செய்து விட்டாள்.

ஆகையால் அவன் தாய் புடவை சமாச்சாரத்தை சொன்னதும் மிக்க கோபமடைந்தான்.

'அப்படியானல் கொஞ்சம் மிளகாய் தூள் கட்டி கொடுக்கச் சொல்!' என்று சீறி விழுந்தான்.

அவன் கூறியதைக் கேட்ட தாய் மிகவும் திடுக்கிட்டாள். அவன் கூறுவது ஒன்றும் அவளுக்குப் புரியவில்லை.

'ஏண்டா 'சின்னு,' மிளகாய் தூள் என்னத்திற்குடா?' என்று கலவரத்துடன் கேட்டாள்.

'எதற்கா! அங்கிருக்கிற சுங்கச் சாவடி அதிகாரிகளின் கண்களில் போடத்தான்! அப்பொழுதுதானே துணிகளைக் கொண்டுவந்து விடலாம்?'

அவன் தாய் பேசாமல் வெளியில் சென்று விட்டாள்.

'சின்னு' வெளியில் போகக் கால் எடுத்து வைத்ததும் எதிர்விட்டு வேங்கடராமய்யர் வந்துவிட்டார்.

'இதேதடா சனியன்! போகும் போதே குறுக்கே வந்து தொலையாது' என்று சகுனத் தடையைக் கண்டு முணு முணுத்துக் கொண்டிருக்கையிலே, 'குட் மார்னிங் சார்?' (Good Morning) என்று கூறிக்கொண்டே அந்த எழவெடுத்த பிராமணன் பல்லைக் காட்டிக் கொண்டே வந்தார். அவர் பல்லைக் காட்டிக்கொண்டு வரும்போதே அவர் ஏதோ ஒரு காரியத்திற்காகத் தான் வருகிறார் என்பது 'சின்னு'விற்குத் தெரிந்து விட்டது.

'நீங்கள் புதுச்சேரிக்கு போரேள்ளுன்னு கேள்விப் பட்டேன்' என்று கூறிவிட்டு 'சின்னு' முகத்தைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

'உங்களுக்கு ஏதாவது வேண்டு மாக்கும்!' என்று வெறுப்புடன் கூறினன் 'சின்னு.'

'நேக்கு ஒன்னும் வேண்டாம். அதிகம் வாங்கிண்டு வானும்னு உங்களால் முடியாது. ரெண்டு சில்க் ஷர்ட் மாத்திரம் தைச்சாக் கிடுங்கோ! வெறென்னும் வேண்டாம்!'

அன்று 'சின்னு' தன் புதுச்சேரி பிரயாணத்தை நிறுத்தி விட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

உங்களுக்கு புதுச்சேரி சில்க் அல்லது சோப் வேண்டுமா? வேண்டுமானல் சொலுங்கள்; 'சின்னு' அடுத்த தடவை தெரியாமல் புதுச்சேரிக்குப் புறப்படும் போது சொல்லி அனுப்புகிறேன்.

"என்ன டாக்டர் இந்த வியாதிக்காக ஆயிரம் ஆயிரமாக செலவழித்தாய் விட்டது!"

"ஆனல் அப்படியானல் இன்னும் கொஞ்சம் முன்னடியே வந்திருக்கப் படாதோ!"

கணையாழியின் மர்மம்

("ராஜாமணி")

துலைக்காட்டாபுரம் 'ட்ராவலர்ஸ் பங்களா'-இழவு பட்ட பாடு பட்டது. சென்ற பத்து வருஷங்களாக அதில் படிந்திருந்த தூசியும், அழுக்குகளும் சுவரிலிருந்த சிலந்திக் கூடுகளும் சுத்தமாகப் பெருக்கப்பட்டன. கிராம முன்சிப் திவாகரம பிள்ளை தரையில் கால் பாவாமல் ஓடிக் கொண்டிருந்தார். ரெவின்யூ இன்ஸ்பெக்டர் வக்ரதந்த மய்யங்கார் அங்கு மிங்குமுள்ள சாமான்களை ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்தார். கர்ணம் குப்டஸாமி நாயுடு ஊரிலுள்ள கோழி முட்டைகளையெல்லாம் சேகரித்துக் கொண்டிருந்தான். இந்த கலாட்டாவுக்கெல்லாம் காரணம், மறுநாள் ஜில்லா கலெக்டர் மிஸ்டர். ஸ்டோன் துரையவர்கள் தம் தர்மபத்தினி சகிதம், அவ்வூரில் முகாம் செய்ய விருந்ததுதான்!

மறுநாள் காலை சுமார் எட்டு மணிக்கு கலெக்டர் துரையவர்கள் தம் 'ரோல்ஸ் ராய்ஸில்' ஜம்மென்று வந்து இறங்கினர். அவருடன் கூட வந்தவைகள், அவர் தர்ம பத்தினியும், டைகரும், பட்லர் சின்னசாமியும், அரை டஜன் படுக்கைகளும், சில பீர் பாட்டில்களும் தான்!

பட்லர் சின்னசாமிக்கு அன்று இடுப்பு ஒடிந்து விட்டது! அவன் அவ்வளவு வேலை செய்யவேண்டியிருந்தது அன்றைக்கு! என்றுமில்லாத டின்னர் பார்ட்டிகளெல்லாம் தயார் செய்வதென்றால், அவன் என்ன பிரம்மாவா சிருஷ்டிக்க?

இதற்குமேல் கஷ்டப்பட வேண்டியிருந்தது ரெவின்யூ இன்ஸ்பெக்டர் மிஸ்டர் வக்ரதந்ததற்கு! நான் கஷ்டப்பட்டு அவ வருஷம் மீதப் படுத்திய பணத்தை கொஞ்சமும் யோசியாமல் எடுத்து வீசி எறிந்தார்! கிராம முன்சிப் பிடத்தில்தான்! இதற்கிடையில், தான்

துரையிடம் நல்ல பேர் வாங்க வேண்டுமென்ற எண்ணத்துடன் 'ப்ரமோஷன்'-என்ற மந்திரத்தை ஓயாமல் ஜபித்துக் கொண்டு, கலெக்டர் துரைக்கு ஊழியம் செய்து வந்தார்.

அன்றைய நாள் கலெக்டர் தம்பதிகளுக்கு உள்ளூர் கோவிந்தசாமிக் கௌண்டரின் கிராமபோனுடனும்; வக்ரதந்தத்திற்கு கையிலுள்ள பணமும் மூன்று குடம் தொண்டைத் தண்ணீருடனும்; கிராம முன்சிப் தலையாரி முதலிய சில்லரை அதிகாரிகளுக்கு கால்களில் வலியுடனும்; பட்லர் சின்னசாமிக்கு தன் அடுப்புடனும் காலம் கழிந்தது. பட்லர் சின்னசாமி மாத்திரம், அன்றையதினம் தனக்கு வழக்கமாகக் கிடைக்கும் அரைட்ராம் கூடக் கிடைக்கவில்லையென்று கிராம முன்சிப்பிடம் குறை கூறிக் கொண்டிருந்தான்.

இரவு சுமார் பத்துமணி இருக்கலாம். துரைசானியின் படுக்கை அறையிலிருந்து ஓர் கூக்குரல் கேட்டது. அந்த அம்மாள் துரையிடத்தில், அவள் தகப்பனார் கொடுத்த வைரமோதிரம் காணாமற் போய் விட்டதென்று சொல்லி ஒருகுரல் அழுதாள். கலெக்டர் துரை தான் அதை எவ்விதமாகவாவது கண்டுபிடித்து தருவதாய் வாக்களித்து சமாதானப் படுத்தினார்.

அன்றிரவே சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பாரங்குசம் நாயுடுவிற்கு 'கலெக்டர் துரை ஏதோ ஓர் அவசர காரியமாக கூப்பிடுகிறார்'—என்று தகவல் அறிவிக்கப்பட்டது. அவர் வேர்க்க விறு விறுக்க தனது சகாக்களுடன் பங்களாவிற்கு ஓடி வந்தார். கலெக்டர் துரை, நாயுடுவை தம் பக்கத்தில் அழைத்து, விஷயத்தை அறிவித்து, அம்மோதிரம் அதிக விலையுள்ளதென்றும், அதை இரண்டு தினங்களுக்குள் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் கண்டிப்பாய்க் கூறி விட்டார்.

இன்ஸ்பெக்டர் பாரங்குசம் நாயுடுவுக்கு அஸ்தியில் சுரம் கண்டு விட்டது! 106 டிக்ரி வரை கூட ஏறி விட்டது என்று சொல்லலாம். எனவே அவர் அபாயகரமான நிலைமையிலிருந்தார். ஆகையால் அவர் தம் ஆபீஸ் அறையில் தொப்பென்று நாற்காலியில் சாய்ந்து விட்டார். மறுநாள் காலையில் விழித்தெழுந்தவுடன் தான் அவருக்கு பிரக்ஞை வந்தது.

பாவம்! பாரங்குசம் நாயுடு இதைச் சற்றும் எதிர் பார்க்கவில்லை. தன் இருபத்திரெண்டு வருஷ சர்விசில் இத்தகைய நெருக்கடியான நிலைமை என்றும் ஏற்பட்டதில்லை. அவர் அன்று பரிதபிக்கக் கூடிய நிலையிலிருந்தார். என்ன செய்வதென்று தெரியவில்லை. தன் ஆபீஸ் அறையில் 'டாக்டாக்' என்று பத்துத் தடவை சுற்றினார். தலையைப் பிய்த்துக் கொண்டார். அதனால் ஏற்பட்டது கடுமையான தலைவலிதான்! வேறென்ன? ஏதாவது யோசனை என்று நினைக்கிறீர்கள்?

அன்று அவ் வைர மோதிரத்தை பங்களாவில் மூலை முடுக்குகளிலெல்லாம் தேடினார்கள். அதன் பலன் அவர்களுக்கு ஏற்பட்ட கால் கை உளைச்சல் தான். வைர மோதிரம் போன இடம் தெரியவில்லை. அது ஒரு மர்மமாகவே இருந்தது.

சப் இன்ஸ்பெக்டர் கோவிந்தசாமி இன்ஸ்பெக்டர் பாரங்குசத்தினிடம் ஓடோடியும் வந்தார். காதோடு காதாக ஏதோ 'குசு குசு' என்று சொன்னார்.

பாரங்குசம் 'கல கல'—வென்று சிரித்தார். ஏதோ அதிசயமான தொன்றை கண்டுபிடித்து விட்டதாக அவர் முகம் காட்டியது. முந்தைய நாளில் இருந்த துக்கக் குறிகள் போய், அவர் முகம் அன்று பன் மடங்கு பிரகாசித்தது. என்றுமில்லாத புன்முறுவல் அவர் இதழ்களில் தவழ்ந்தது.

உடனே தம் கைப் பெட்டியைத் திறந்தார். கோவிந்தசாமி கையில் ஏதோ கொஞ்சம் ரூபாய் நோட்டைத் திணித்தார். அவ்வளவு தான்! பங்களா காவற்காரன் மாயாண்டித் தேவனுக்கு ஆள் விடப்பட்டது! சிறிது நேரத்தில் அவனும்

வந்து சேர்ந்தான். பாரங்குசம் ஏதோ அவனுடன் சிறிது நேரம் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். பிறகு மாயாண்டித் தேவன் 'லாக் அப்பில்'—வைக்கப்பட்டான்.

மறுநாள் திலக்காட்டாபுரம் கோர்ட்டில் ஏகக் கூட்டம். கலெக்டர் அம்மாவின் வைர மோதிரத்தை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பாரங்குசம் நாயுடு கண்டு பிடித்து விட்டாரென்றும், அவர் இது விஷயத்தில் எடுத்துக் கொண்ட முயற்சியையும் அடைந்த வெற்றியைப் பற்றியும் ஜனங்கள் வெகுவாகப் பேசிக் கொண்டிருந்தனர். மேலும் அன்று விசாரணையைக் கவனிக்க ஜனங்கள் ஓடோடியும் வந்து கொண்டிருந்தனர்.

பாரங்குசம் நாயுடு ,என்றுமில்லாத உற்சாகத்துடன் தனது ஆசனத்தில் அமர்ந்திருந்தார். அவர் கைகளில் பளபளவென்று ஒரு வைரமோதிரம் விளையாடிக் கொண்டிருந்தது. காவற்கார மாயாண்டித் தேவன் கண்ணில் நீர் ததும்ப கூண்டில் ஏற்றப்பட்டான். கலெக்டர் துரையும் விசாரணையை ஆரம்பித்தார்.

பாரங்குசம் நாயுடு எழுந்திருந்து சுற்றுமுற்றும் பார்த்தார். தொண்டையை இரண்டுதரம் கனைத்துக்கொண்டு, காணாமற்போன வைர மோதிரத்தை, காவற்கார மாயாண்டித்தேவன் உள்ளூர் காசுக்கடை கந்தசாமி செட்டியாரிடத்தில் விற்க வந்ததாயும் அதைத் தாம் துப்பறிந்து கண்டு பிடித்ததாயும் அறிவித்தார். கந்தசாமி செட்டியாரும் சாக்ஷிக் கூண்டில் ஏற்றப் பட்டார்.

அதே சமயம் பட்லர் சின்னசாமி கோர்ட்டுக்கு ஓடோடியும் வந்தான். துரைசானியம்மாள் ஏதோ ஓர் அவசர காரியமாய் துரையைக் கூப்பிடுவதாய்த் தெரிவித்தான். உடனே விசாரணை மறுநாள் ஒத்தி வைக்கப்பட்டது. கலெக்டருடைய மோட்டாரும் பங்களாவுக்குப் புறப்பட்டது.

வாசலில் நின்ற துரைசானியம்மாள் துரையிடம் ஓடோடியும்வந்து வைரமோதிரம் கிடைத்து விட்டதென்றும், தான் அதைக் குளிக்கும்போது, ஞாபக மறதியாய் பழைய கௌனில் வைத்துவிட்டதாகவும் அன்று தற்செயலாக அதை எடுக்கும்போது அது கீழே விழுந்ததென்றும் சொல்லி அவருடன் கைகுலுக்கினாள்.

அன்றையதினம் மாயாண்டி தேவன் என்றுமில்லாத உற்சாகத்துடன், மனைவி மக்களுடன் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்தீர்களானால் . நீங்கள் பிரமித்தே போவீர்கள்.

அதே சமயம் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் பாரங்குசம் நாயுடு, தமது வீட்டில் தம் நீண்டநாள் சர்விஸில் ஏற்படாத 'பிளாக் மார்க்' அன்றையதினம் ஏற்பட்டதைக் குறித்து வருத்தப்பட்டுக் கொண்டிருந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை!

(பாரங்குசம் நாயுடுவின் கையிலிருந்த வைர மோதிரத்தை மர்மமாகவே விட்டு விடுவோம். ஆனால் அது எவ்விதம் வந்ததென்று உங்களால் ஊகிக்க முடியுமா?)



நத்தையைக் கண்ட பயம்?

நமது நாட்டிலிருக்கும் பெற்றோர்கள் தம் மக்களை இளமையிலிருந்தே எடுத்ததற்கெல்லாம் பூச்சாண்டி காட்டி கோழையாக்கி விடுகிறார்கள். அவ்வித நிலையில் இச்சிறுவர்கள் நத்தையைக் கண்டு நடுங்குவதில் என்ன ஆச்சரியம்! இவர்கள் பெரியவர்களானாலோ...!

ஸ்ரீமதி பரிணயம்

—:(0):—

("இரஸிகன்.")

"சென்ற ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று சனிக்கிழமை யாகிய சுபதினத்தில் நல்லோரையில் மாலை 6-மணிக்குச் சென்னை மவுண்ட் ரோட்டிலுள்ள கெயிட்டி தியேட்டரில், சகல லோக சரண்யனாகிய திருப்பாற் கடலில் சேஷசயனத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ மகாவிஷ்ணுவுக்கு அம்பரீஷ மகாராஜன் அருமந்த புத்திரி ஸ்ரீமதியைக் கன்னிகாதானஞ் செய்து கொடுக்க பெரியோர்களால் நிச்சயித்திருப்பதால், தாங்கள் தங்க ளிஷ்டஜன குடும்ப சமேதராய் விஜயஞ் செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்" என, கும்பகோணம் ஸ்ரீராம் டாக்கீஸாரும், சென்னை கெயிட்டி டாக்கிஸாரும் விடுத்த அழைப்பின்மீது நானும் அவ் விவாக மகோற்சவத்திற்குச் சென்றிருந்தேன்.

கலியாணம் ஒரு மாதிரியா யிருந்தாலும், சங்கீதக் கச்சேரி வெகு நன்றாயிருந்தது. ஸ்ரீமதியை மணந்து கொள்ள மூன்று படே ஆசாமிகள் போட்டி போட்டனர். அவர்களில் நாரதரும், பர்வதரும் நைட்டிக பிரம்மசாரிகள். (தொண்டு கிழவர்களாகிய இவ் விருவரும் இளங்கன்னி ஸ்ரீமதியை மனைவியாகப் பெற ஆசைப்பட்டதை நாம் குறை கூறமுடியுமா! மக்களாகிய நம்மிலே தலை நரைத்து பல்லெல்லாம் விழுந்துபோன கிழவர்கள் பால் மணம் மாறா சிறுமிகளை விவாகஞ்செய்து கொள்ளவில்லையா!) மற்றொருவர் ஏற்கனவே, இரு மனைவியரை யுடைய அழகிய மணவாளப் பெருமாள். அவர் பெண்களுடைய மனநிலையை நன்கு அறிந்தவராதலால், அவர்தான் இப்போட்டியில் வெற்றி பெற்று, எல்லோரும் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே பெண்ணை அடித்துக் கொண்டு போய்விட்டார். மற்றிருவரும் ஏமாந்து நின்றனர்.

* * *

இந்த இதிகாசக்கதை அத்யாத்மிக ராமாயணத்தில் இருக்கிறதாம். பெரும் பாலோர் கேட்டறிந்திராத ஸ்ரீராம ஜனனத்துக்கு மூல காரணமான இவ்வபூர்வக் கதையைத் தேடிக் கண்டுபிடித்து தமிழ்ப் பேசும் படமாகக் கொண்டு வந்தவர் ஸ்ரீமான் கலியாணராம சாஸ்திரிகள் பி. ஏ., பி. எல், ஆவார். அவர் சத்கதா காலட்சேபம் செய்வதில் பிரசித்தி பெற்றிருந்த சாஸ்திரியா ரொருவரின் திருக்குமாரர். அத்துடன் தாம் சர்வ கலாசாலையில் இரட்டைப் பட்டம் பெற்றவாயிருந்தும், தம் தந்தையின் அடிச்சுவட்டையே பின்பற்றிக் கதா காலட்சேபஞ் செய்து பேரும் புகழும் பெற்று வருபவர். அத்தகையவர் ஸ்ரீமதி பரிணயத்தைத் தமிழ்ப்பட உலகுக்கு வெளிப்

படுத்தியதில் ஆச்சரிய மொன்றுமில்லை. இப்படத்தைத் தயாரிப்பது சம்பந்தமான எல்லா விஷயங்களும் அவர் மேற் பார்வையிலேயே நடந்திருப்பதாகத் தெரிகிறது. அத்துடன் கதைக்குரிய பாட்டு, வசனம் ஆகியவைகளை அவரே இயற்றியிருப்பதோடு, டைரக்ஷனுஞ் செய்தி நக்கிறார். இப்படம் எடுக்கும் விஷயத்தில் இவ்வளவு தூரம் சுதந்திரம் பெற்றிருக்கும் இவர் போதிய அவகாசங் கொடுத்து நடிகர்களுக்கு இன்னும் நன்கு பயிற்சியளித்திருப்பாரானால் இப்படம் ஒருவாறு

முடையவராகக் காணப்படும் இப் பெண்மணியை 'மேக்—அப்'பில் விகாரப்படுத்தி 10-வயது சிறுமி போல் மாற்றி யிருக்கிறார்கள்.

நல்லூர் விஸ்வநாத ஐயர் நாரதராகவும், மாதிரிமங்கலம் நடேச ஐயர் பர்வதராகவும் நடிக்கின்றனர். பர்வதர் எதிலும் குருவுக்கு மிஞ்சிய சிஷ்யனாகவே இருக்கிறார். கதைப்போக்கில் மட்டுமன்றி படத்தில் கூட உண்மையாக பாட்டிலும்,நடிப்பிலும் பர்வதர் நாரதரைவிட மீசுரமா யிருக்கிறார். அவரது இனிய பாடல் கேட்கத்

ஸ்ரீமதி பரிணயத்தில் கோலாட்டக் காட்சி.

வெற்றி யடைந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இப்படத்தில் நடித்தவர்கள் அனைவரும் அமெச்சூர் நடிகர்களெனக் கூறப்படுகிறது. ஸ்ரீமதி. ஸ்ரீமதி ஆம். கதாநாயகியாக நடிக்கும் நடிகையின் பெயரும் ஸ்ரீமதிதான். அவர் ஆபாசத்திற்கிடமின்றிச் சுமாராக நடிக்கிறார். பாட்டுந் தேவலை. நேரில் பார்த்தால் 16 வயதுக்கு மேற்பட்ட வயதும் நல்ல வசீகரமான முகமு

தக்கது.

ஸ்ரீமதியின் தாயாராக நடிக்கும் ஸ்ரீமதி சீதாவுக்கு அழகிய தோற்றமோ நடிப்போ எதுவுமில்லை. அம்பரீஷ மகாராஜாவாக நடித்தவருக்கு வேடப் பொருத்தம் காணப்படவில்லை. ஆனால் அவர் சுமாராகப் பாடுகிறார்.

சாக்ஷாத் மகாவிஷ்ணுவைப் பார்த்தால் 'இவரா பேரழகி ஸ்ரீமதியின் உள்ளத்தைக் கவர்ந்தவர்?' என்று ஆச்சர்யப்பட

இரண்டு உயரிய தமிழ் பேசும் படங்கள்!

மிஸ்டர் ஒய். வி. ராவ் அவர்களால்
டைரக்ட் செய்யப்பட்டது.

விரைவில் திரையில்
எதிர்பாருங்கள்!

பாமா பரிணயம்

மிஸ். டி. பி.
ராஜலக்ஷ்மி
ஸ்ரீ செருகளத்தூர்-சாமா
ஸ்ரீ வித்வான்-ஸ்ரீனிவாசன்
ஸ்ரீ எம். ஜி. தண்டபாணி
மிஸ். எஸ். பி. லக்ஷிமி
மிஸ். எஸ். எஸ். ராஜாமணி
மிஸ். கே. அரங்கநாயகி
ஸ்ரீ எம். ஆர். துரைராஜ்
ஹாஸ்யம் நடேச அய்யர்

மற்றும் அநேக உன்னத
நடிகர்களும் நடித்தது.

தயாராகி வருகிறது!

பில்வமங்கள்
அல்லது
சிந்தாமணி

மிஸ். கே.
அஸ்வத்தம்மா

ஸ்ரீ செருகளத்தூர்-சாமா
ஸ்ரீ வித்வான்-ஸ்ரீனிவாசன்
மிஸ். எஸ். எஸ். ராஜாமணி
மிஸ். கே. அரங்கநாயகி

இன்னும் பல திரைப்பட
நக்ஷத்திரங்களும் நடித்தது.

கைவசமிருக்கும் படங்கள் :—

கோவலன்	- T. P. ராஜலக்ஷிமி V. A. செல்லப்பா நடித்தது.
லலிதாங்கி	- ,, ,, ,,
கிருஷ்ண-அர்ஜுன	பாப்பா, T. A. நாகசாமி பாகவதர் நடித்தது.
தூக்கு தூக்கி	- C. V. V. பந்துலு, K. T. ருக்மணி நடித்தது.

படம் வேண்டுவோர் எழுதவும் :—

ராயல் டாக்கி டிஸ்டிரிபியூட்டர்ஸ்,
120, தெற்கு மாசி வீதி, மதுரை.

வேண்டி யிருக்கிறது. 'எத்தைக்கண்டு நீ இச்சை கொண்டாய் மகளே!' என்று யாரோ ஒரு தாய் தன் மகளைப் பார்த்துக் கேட்டதாக வருணிக்கப்பட்டுள்ள தமிழ்ப் பதத்தை ஸ்ரீமதிக்கு ஞாபகமூட்டிப் பாடலாமா என்று தோன்றுகிறது. அவர்தான்

மேனாட்டாராலும் பாராட்டப்பட்டுவரும்
பிரசித்திபெற்ற நடிகை
ஸ்ரீமதி. எனாக்ஷி ராமாராவ்.

அப்படி யென்றால் அவருக்கு மனைவிமாராக வந்த பூதேவி, ஸ்ரீதேவிகள் பேசாமடந்தைகளாக வல்லவோ இருக்கிறார்கள்? (தமிழ்ப்பாஷை தெரியாத வங்காளிப் பெண்கள் என்னவென்று பேசுவது!) அழகுப் பதுமைகளான அவர்களுக்குக் கண்களுக்கு ரம்மியப்படாத கணவன்மீது கோபம் போயிருக்கிறது.

இப் படத்துக்கே பெருஞ் சிறப்பளிக்கக் கூடியது எது வென்றால் திரை மறைவு சங்கீதம் என்று நான் சொல்லுவேன். வெகு அற்புதம்! வெகு அற்புதம்! அந்த கோட்டு வாத்தியத்தை இன்றைக் கெல்லாம் கேட்டுக்கொண் டிருக்கலாம். இவ்வாத்தியம் தமிழ்ப் பட உலகுக்குப் புதிதாகும்.

கதைப் போக்கின் முற்பகுதி அவ்வளவு சுவாரஸ்யமா யில்லை. ஒளிப் பதிவு சில இடங்களில் சரியாக இல்லை. ஸெட்டிங்குகள் சுமாரா யிருக்கின்றன. சினிமாப் படத் தொழிலில் இதுவே முதல் தடவையாகப் புகுந்திருக்கும் ஸ்ரீ கல்

தமிழ் மக்களின் மனதைக் கவர்ந்துள்ள
பேரழகி ஸ்ரீமதி. மாதுரீ.

யாணராம சாஸ்திரிகள் பெரும்பாலும் அமெச்சூர் நடிகர்களைக்கொண்டே இவ்வளவு ஜோராகிலும் படத்தைச் சிறப்புறச் செய்ததற்காக அவரைப் பாராட்டாதிருக்க முடியாது.

பிரமிப்பு!

பரபரப்பு!!

சென்னை கிரௌன் டாக்கீஸ்

பாட்லிங் மணி, மிஸ். மீனாக்ஷி நடிக்கும்

மதராஸ் மெயில்

(தமிழ் பேசும் படம்)

பிரமிப்பூட்டும் சம்பவங்கள் நிறைந்த முதல் தமிழ்ப் படம்.
நீங்கள் என்றும் மறக்கமுடியாத காக்ஷிகள்.
பயங்கர சண்டைகள்.

8-8-36 சனிக்கிழமை முதல் தினசரி 3 காக்ஷிகள்.

எதிர்பாருங்கள்!

எதிர்பாருங்கள்!!

பாரத புத்திரி

அல்லது

அனாதைகள் சேவை.

(அதியுன்னத சமூக சீர்திருத்த தமிழ்பேசும் படம்)

கோலாப்பூர் பிரதிபா ஸ்டுடியோவில்
* * தயாராகின்றது. * *

தயாரிப்பவர்கள் :—Super Pictures Syndicate,
Devakottah.

முதலாளிகள் கவனிப்பார்களா?

—(0)—

உலகில் மனிதர்கள் முன்னேறுவதற்கான, அனுகூல சாதனங்கள் பலவகைக்குள் சினிமாவும் ஒன்று.

சினிமாவின் மூலம் நாம் காணுதவைகளைக் காண்கிறோம். கேளாதவைகளைக் கேட்கிறோம். மனித சக்திக்கு மீறிய செயல்களையும் பார்க்கிறோம். ஆனால், மீறிய செயல்களும் மனிதனாலேயே சாத்தியமாகின்றன.

'இவைகள் எப்படி சாத்தியமாகின்றன? யார் இதைக் கண்டு பிடித்தவர்? இம்மாதிரி ஆச்சர்யம் தரத்தக்க விஷயங்களை நம் நாட்டிலும் ஏன் கண்டு பிடிக்கக் கூடாது?' என்று இவ்விதமான கேள்விகளைக் கேட்பவர் மிக மிகச் சொற்பம். பரிதாபம்! நம் நாட்டார்கள் சினிமாவை—பெண்களைப் போல் ஓர் இன்பம் பயக்கும் கருவியாகவே எண்ணி வருகின்றனர். பட முதலாளிகளும் அதற்குத் தகுந்த விதம் படம் பிடிக்கின்றனர்.

உதாரணமாக, ஒவ்வொரு படத்திலும் நாட்டியத்துக் கென்று சோம் விடப்படுகிறது. விடட்டும். ஆனல், அது கதைக்கு அப்பாற்பட்டதா யிருந்தபோதிலும் காட்டப் படுகிறதே, அது ஏன் என்று தான் கேட்கிறேன்? அதுவுந் தவிர, காமுகர்களுக் கேற்ப அரைக்கால் உடையில் ஆபாசமான டான்ஸ் எதற்காக?

மற்றும் புராணக் கதைகளையே படம் பிடித்துக் கொண்டிருப்பதை முதலாளிகள் இன்னும் விட்டபாடில்லை. ஒரு விதத்தில் அதையும் ஒப்புக் கொண்டாலும், அப் புராணக் கதையை அடியோடு மாற்றி விடுகிறார்கள். அது ஒரு பெரிய கண்முடியா யிருக்கிறது! உதாரணமாக, இப்போது சென்னையில் காட்டப்படும் 'குசேலரி'ல், அவருக்கு இருபத்தேழு புதல்வர்களைக் காட்டுவதற்குப் பதிலாக, சில பையன்களையும் ஒரு பெண்ணையும் காட்டுகிறார்கள். குசேலருக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்பதை முதலாளி மறந்தே விட்டார். குசேலர் பூங்காவியேறிய சிறிதும் கிழியாத வேஷ்டி யொன்றை உடுத்தியிருக்கிறார். பையன்களும், மேல் வேஷ்டி யில்லாமல் இருப்பதைத் தவிர கிழியாத வேஷ்டிகளையே உடுத்தி யிருக்கின்றனர். சுசீலையோ நல்ல அழுத்தமான பட்டுப் புடவையை உடுத்திக் கொண்டிருக்கிறாள். அச் சிறிய பெண்ணும் சில இடத்தில் நன்றாகத் தலை வாரிக் கொண்டிருக்கிறது. துவாரகைக்குக் குசேலர் சென்று பார்க்கும் போது, அங்கே கோட்டை வாயிலில் பல தேசத்து ராஜாதி ராஜர்களெல்லாம் பகவானுடைய பேட்டிக்குக் காத்திராமல் துவாரபாலகர்கள் குசேலருடைய வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பது போல் காட்டப்படுகிறது. இத்தியாதி பல. புராணக் கதைகளில் பண்டைக்காலத்தவர் வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது தான் சரி, மக்களுக்கும் உணர்ச்சியை உண்டாக்கும். மேற் கூறிய படமோ பரிதாபத்தையும், இன்பத்தையுமே உண்டாக்குகிறது.

வீரம், தீரம், சூரம், ஆவேசம், உணர்ச்சி, பக்தி என்றெல்லாம் அகராதியில் வார்த்தைகள் காணப்படுகின்றன வல்லவா? அவை யத்தனையும் செயலில் காட்டுவித்த நாடு இது! இப்போதோ அவைகளெல்லாம் மறந்தே போய் விட்டன. ஏட்டில் ஒளிந்து—மறைந்து கொண்டன. ஐயோ! வீரத்திற் சிறந்த அர்ஜுன னெங்கே? அஞ்சாத தீரன பீமனெங்கே? சிவாஜி யெங்கே? சூரபத்மனெங்கே? கடவுளை அடையவேண்டுமென்ற ஆவேசம் நிறைந்து பக்தியினுற் பதவியடைந்த பெரியோர்க ளெங்கே?

வஞ்சகம், சூது, பொய், பித்தலாட்டம், பொறாமை, கோபம், காமம், லோபம், அதைரியம், கோழைத்தனம் இவையே மலிந்து கிடக்கும் இந் நாட்டை முன்னோர்களின் சரிதைகளின் மூலம் ஏன் தோற்றுவிக்கக் கூடாது? முதலாளிகள் கண் விழிப்பார்களா? இந்திய மக்களைத் தட்டி யெழுப்புவார்களா?

—எஸ். கே. கணேசன்.

"பாமா பரிணயத்"தில் ஒரு காட்சி.

மூன்றெழுத்துப் போட்டி நே. 12. வெகு சுலபம்! மூன்றே 3 எழுத்துக்கள்!!

ரொக்கப் பரிசு ரூ. 2000. (முடிவு தேதி செப்டம்பர் 5உ)

முதற் பரிசு ரூ 1200. இரண்டாவது பரிசு ரூ. 700.

அதிக விடைப் பரிசுகள் ரூ. 50, 30 & 20.

1.	க —.	ஓர் மரம்
2.	— டு	பெருமை
3.	— வ—	பூமி

பிரவேசக் கட்டணம் அணு 4 (1 அணு, முக்காலணு ஸ்டாம்புகளாகவும், அணு 12-க்குமேல் M, O., அல்லது போஸ்டல் ஆர்டரிலும் அனுப்பலாம்.) மானேஜர் தீர்ப்பே முடிவு. தனிக் காகிதத்தில் விடைகள். 1 அணு அதிகம் அனுப்புவோருக்கு 10ம் தேதியே முடிவு அனுப்பப்படும்; அன்றே பரிசுகளும். அன்னிய நாட்டு ஸ்டாம்புகள் கூடா.

மானேஜர்:-G. R. சர்வா & கோ., (நெ. 12 போட்டி) கான்பாளையம், மதுரை.

உலகத்தில் புராணப் படக்காக்ஷியில் பெரிதென
கருதப்படும் மஹாபாரதத்தில் ஓர் பகுதியான

வீர அபிமன்யு

இதுவரையில் காணாத உன்னத ஸீன்களுடன் தயாரித்தது.

டைரக்டர்:—புரபுல்லா கோஷ். உதவி டைரக்டர்:—S. நாராயணசாமி.

ஸ்டுடியோ:—கல்கத்தா பயோனீர் ஸ்டுடியோ.

நடிகர்:—எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி. டி. பி. ராஜகோபால்.

நடிகைகள்:—ஸ்ரீ டி. பி. ராஜலக்ஷ்மி ஜெ. சுசீலா தேவி.

ஹாஸ்ய ரத்தினம் ஒடியன் பிளேட்:—பி. எஸ். வேலு பிள்ளை.

: படம் வேண்டுவோர் :

தி சூபர் டமில் டாக்கீஸ்,

41, சர். முக்மது உஸ்மான் ரோடு, தியாகராய நகர், சென்னை.

இதோ வெளிவந்து விட்டது!

ஆரம்ப தேதியை எதிர்பாருங்கள்!!

முன்பு பார்த்த படமல்ல! முற்றிலும் புதிது!!

-: நளாயினி :-

(மகத்தான புராண புண்ணிய சரிதை.)

கோலாப்பூர் தயாரிப்பு

என்பதை

ஞாபகத்தில் வையுங்கள்.

விவரங்களுக்கு :—

ஓரியண்டல் சௌண்ட் பிக்சர்ஸ், லிமிடெட், திருப்பூர்.